1202

1202
3-56

REGISTERED No. M. 6165. அணா. 2

# பத்஭ுல் இஸ்லாம்

# FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை

செப்டம்பர் 1956.

| விஷயம். | பக்கம். |
| --- | --- |
| முஸ்லிம்கள் முன்னேறும் மார்க்கம் ... ... | 1 |
| அனாதை அஷ்ரப் (கெ. மு. கவுஸ்) ... ... | 7 |
| பரோபகாரி (எம். எ. மீரான் மொஹிதீன்) ... | 11 |
| திருக்குர்ஆன் சாரசங்கிரஹம் (ரஹ்மத் பாகவி) ... ... ... ... ... | 21 |
| நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் குர்ஆனின் நல்லுபதேசமும் ... ... ... ... ... ... | 24 |
| சிறைப் பறவை சிப்கத்துல்லா அல்லது துப்பு துலக்கிய தூயவர் ... ... ... ... ... | 29 |

... இஸ்லாம் ஆபீஸ் :
... ரோட், திருவல்லிக்கேணி,
மதராஸ் 5.

3L
187055

# பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு

| | | |
|---|---|---|
| வருஷ சந்தா | ரூ. | 1–8–0 |
| தனிப் பிரதி | அணா. | 0–2–0 |
| மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா | ரூ. | 2–0–0 |

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.


## மஜ்மூஅ முனாஜாத்து

சுத்த தமிழ்.

(இரண்டாம் பதிப்பு)

இந்த புஸ்தகத்தில் ஹக்கு பேரில் முனாஜாத், யாஸைய்யிதி மாலை, யாகுத்பா மாலை, தலை பாத்திஹா, ஸலவாத்துப் பாட்டு, முத்துமணி மாலை, பக்தி ஆனந்த பாத்தி முத்து மாலை, முஹியித்தீன் முனாஜாத், காஜா பந்தேநவாஸ் முனாஜாத்து, ஸரசுவதி மாலை, காஸீம் புலவர் இன்னிசை, கலியாண வாழ்த்துப் பதங்கள் ஆகிய இவைகள் சேர்ந்திருக்கின்றன. இதன் விலை அணா. 8

ஷை அரபுத் தமிழ் விலை ரூ. 1—4—0

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ், 5.

# பத்ஹுல் இஸ்லாம்

செப்டம்பர்—1956.


## முஸ்லிம்கள் முன்னேறும் மார்க்கம்

மதங்களும் சமூகங்களும் ஜமாஅத்துகளும் முன்னேற்றமடைவதற்குத் தலைவர்கள் பற்பல மார்க்கங்கள் கூறிவருகிறார்கள். எந்த மதமும் எந்த சமூகங்களும் சரியே, காலதேச வர்த்தமானத்துக்கேற்ப இணங்கிப் போகாதவரை முன்னேற்றத்துக்கு சாதனையில்லை என்று சிலர் கூறி வருகின்றனர். அங்ஙனம் ஒரு மதமோ சமூகமோ, கால தேசவர்த்தமான சூழ்நிலைக்கேற்ப இணங்கிச் செல்லாமல், தன்னுடைய பௌராணிக முறைமையின்படியே பிடிவாதமாய் இருந்து நடந்து கொள்ளுமாயின், அது முயற்சியினாலும் அமைப்பினாலும் முன்னேற்றமடைவதுபோல் காணப்பட்டாலும், அதன் முன்னேற்றப் பாதையில் அநேக இடையூறுகளும் முட்டுக்கட்டைகளும் உண்டாகும் என்றும் சொல்லப்படுகிறது.

ஆம், வாஸ்தவமாக இந்த உண்மையைத்தான் நம் இஸ்லாமிய சரித்திரமும் பிரத்தியக்ஷமாய் கண்டு வந்துள்ளது. நபிகள் நாயகம் முஹம்மது ரஸூலுல்லாஹி (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்கள் எழுந்தருளிய காலத்துக்கு முன்னைய சமூகங்களின் நிலையையும் இந்த உண்மை எடுத்துக்காட்டுகிறது. அதற்குமுன், அதாவது ஆதம் நபி (அலை) உடைய சந்ததியார்களாகிய மாந்தர் சமூகம், அந்த நபி காலம் தொட்டு ஈஸா நபி காலம் வரை நடந்துகொண்ட ஆத்மார்த்த—லோகார்த்த சமுதாய முறைகளெல்லாம் "வல்லான் வகுத்த வாய்க்கால்" என்ற ரீதியில் இருந்து வந்தன. முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் இத்தரணியில் இறுதி

நபியாகவும் மகாத் தீர்க்கதரிசியாகவும் எழுந்தருளி உபதேசித்த பின்னர், முன் உண்டாயிருந்த வழிபாடுகளும் முன்னேறும் மார்க்கங்களும் மூதாதைகள் வகுத்த வாய்க்கால் என்னும் வழி முறைகளும் பிரயோஜனமில்லாமற் போய் ரத்துச் செய்யப்பட்டு விட்டன.

இதற்குக் காரணமென்ன? மனித சமுதாயத்தின் அறிவும் ஆராய்ச்சியும் நடைமுறையும், எப்போதும் எல்லா காலத்திலும் எல்லா சூழ் நிலையிலும் ஒரே மாதிரியாய் இருப்பதில்லை. ஆகையால்தான், எந்த ஒரு சமூகமும் ஒரே பாட்டையில் போய்க் கொண்டிருந்தால் அது உலகத்தின் விஸ்தீரணத்தையும் பரந்த பெரு வெளியையும் கண்டு கொள்ள முடியாது போய் விடுகிறது.

நபிகள் நாயகம் முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுடைய காலத்துக்கு முந்திய காலங்களில் இருந்தவர்களுள் அறிவாளிகளும் சீர்திருத்தகர்களும் வழிகாட்டும் பெரியோர்களும் இருந்து கொண்டுதான் இருந்தார்கள். அவர்களும், அறிவுகொண்டு ஆராய்ச்சி புரிந்து கொண்டும் கல்வி கொண்டு விவேகத் தெளிவு பெற்றுக்கொண்டும் தான் இருந்தார்கள். ஆயினும் அப்பண்டைய மூதாதைகளின் அறிவு ஆராய்ச்சித் திறமையினல் உண்டான வழி முறைகளே, இக்காலத்து நவீன அறிவு ஆராய்ச்சிக்காரர்கள் "அவை இப்போது ஒன்றுக்கும் உதவாதவை; ரத்துச் செய்யப்பட வேண்டியவை" என்று நிரூபித்து விட்டார்கள்.

ஏனெனின் காலத்தின் தேவைகளும் மனித இனத்தாரின் அறிவாராய்ச்சிகளும், எப்போதும் மாறுதல் அடைந்து கொண்டே இருக்கின்றன. மனிதர் வாழ்க்கைக்கு அன்று இருந்த தேவைப் பொருள்கள் வேறு; இப்போது இருக்கும் தேவைப் பொருள்கள் வேறு.

மனித சமூகத்தில் லெளகிக உயிர்வாழ்க்கையில் இருந்த நிலைமையேதான், மாந்தரின் ஆத்மார்த்தமாகிய வைதிக முறையினும் இருந்து வந்தது. அதாவது "மூதாதைகள் மதவிஷயங்களில் நமக்கு காட்டிய வழிகளே நாம் ஒரு போதும் ஒரு சிறிதும் மாற்றக் கூடாது" என்று பண்டைய ஜனத்தலைவர்கள் கூறிவந்த வாதம் அடிபட்டுப் போய் விட்டது. மனிதருடைய உலக வாழ்வு முறையில் மட்டும் மாறுதலும் சீர்த்திருத்தமும் வேண்டும் என்று கூறுவோர், வைதிக வாழ்க்கை முறையாகிய மதவிஷயத்தில் கூட மாறுதல்களே ஏற்றுக்கொண்டு தான் தீர வேண்டிவரும்.

187055

உலகம் தோன்றிய காலத்திலிருந்து இந்தப் பிரபஞ்சத்தின் சரித்திர வரலாறுகளைக் கூர்ந்து நோக்குவோமானல் உலகமும் உலக மக்களும் என்னென்ன விதமாக வெல்லாம் மாறுதல் அடைந்து வந்துள்ளார்கள் என்பது தெள்ளெனத் தெரியும். ஆதியில் நபிமார்களும் ரஸூல்மார்களும் உலகத்தில் தோன்றி, உலகில் மனித சமூகமானது இன்னின்ன விதமாகத்தான் வாழ்க்கை நடத்த வேண்டும், இன்னின்ன விதமாகத்தான் சிந்தனைகள் செலுத்த வேண்டுமென்று சன்மார்க்க முறைகளை வகுத்துக் கொடுத்தார்கள்.

அதெல்லாம் இப்போது இருக்கின்றனவா? மனிதன் முன்னேற்றம் அடைய அடைய, அந்த வைதிகப் பிரார்த்தனை முறைகள் கூட மாறிப்போய் விடவில்லையா? சுயமாக, மனிதனுடைய இயற்கைத்தன்மை, மாறுதல்களை விரும்பி ஏற்றுக்கொள்ளத் தக்கவையாகவே இறைவனல் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது.

இந்த மாறுதல், இயற்கைக்கும் ஒத்தமைந்ததே யாகும். இறைவனுடைய கட்டளையும் போதனையும் இந்நியதியை ஒட்டியே அமைந்திருக்கின்றன. உலகில் தோன்றிய ஒவ்வொரு நபியும், ஒவ்வொரு ரஸூலும் இயற்கையின் புறத்திலிருந்து சில கொள்கைகளையும் லக்ஷியங்களையும் கொண்டுவந்து தம் காலத்து ஜனங்களுக்குப் போதிக்கின்றார்கள். அந்த லக்ஷியமும் போதனையும் வேறு நபி வந்ததும் மாறுதல் அடைந்து விடுகிறது. புதிதாக வரும் நபிமாரும் ரஸூல்மாரும், பழைய நபி ரஸூல்மாரின் போதனைகளை மாற்றி அமைத்து விடுகிறார்கள். மனிதர் சமூகம் அந்த மாறுதல்களை மன உவப்புடன் ஏற்றுக் கொண்டு விடுகின்றன.

"நாஸிக்" என்றும் "மன்ஸூக்" என்றும் இரண்டு விஷயங்கள் நம் இஸ்லாமிய ஷரீஅத்தில் இருந்து வருகின்றன. 'நாஸிக்' என்றால் 'ஏற்கெனவே வழக்கத்தில் இருந்து வரும் விஷயத்தை ரத்துச் செய்து விடும் அம்சம்' என்று பொருள். 'மன்ஸூக்' என்றால் 'எந்த விஷயம் மாற்றப்பட்டு போய் மறைந்து விட்டதோ அந்த அம்சம்' ஆகும்.

"மா நன்ஸக் மின் ஆயத்தின் அவ்நுன்ஸிஹா நிகய்ரிம் மின்ஹா......" என்பது குர்ஆன் ஷரீபில் இறைவன் கூறும் திருவாக்கியமாகும். "இறைவனாகிய யாம் மார்க்க விஷயத்தில் ஒரு ஆயத்தை (விஷயத்தை) மாற்றி விடுவோமாயின் அதைவிட

மேன்மையானதைக் கொண்டு அதற்கு ஈடு செய்து வைக்கின்றோம்'' என்பது அவ்வாயத்தின் கருத்துரையாகும்.

இந்த வாக்கியத்திலுள்ள விஷயம் மறைபொருளல்ல. தெள்ளத் தெளிய விளங்கும் சாதாரண விஷயமாகும். ''பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவல கால வகையினனே'' என்ற மூதுரையும் மேற்படி கருத்தை ஆதரிக்கின்றது. காலத்துக்கேற்ற அவசியப் பொருள் மனிதருக்கு அத்தியாவசியமாகும். பழைய கட்டை வண்டியை கழித்து விட்டு இப்போது நாம் புதியனவாகிய ரயிலிலும் மோட்டாரிலும் சவாரி செய்கிறோமல்லவா? போக்கு வரத்தில் மட்டு மல்ல, நித்திய உணவு முறையிலும், அவசிய உடை விஷயத்திலும், மற்றும் இதர விஷயங்களிலும் மாந்தர் சமூகம், பழையதை கழித்து ஒதுக்கி, புதிய நவீன நாகரிக சாதனங்களை கைக் கொண்டு அனுபவித்து வருவதை இப்போது பிரத்தியக்ஷமாய் நாம் காணலாம்.

உலக விஷயங்கள் ஒரு பக்க மிருக்கட்டும். நாம் நம் பரிசுத்த இஸ்லாமிய ஷரீஅத்தை எடுத்துக் கொள்வோம். 'இஸ்லாம்' என்று நாம் கொண்டாடுகிறோமே, அனுஷ்டிக்கிறோமே, நிர்ணயங் கொள்கிறோமே அதன் தத்துவார்த்தம் என்ன? இஸ்லாத்தின் அந்தரங்கக் கருத்தென்ன?

தீனுல் இஸ்லாத்தின் ஹகிகத் என்னும் அந்தரங்க அம்சமும், ரூஹ் என்னும் ஜீவதத்துவமும் குர்ஆன் என்னும் கித்தாபும், ஸுன்னத் என்னும் ஹதீதுமே யாகும். அதாவது, குர்ஆன் கட்டளைப் படியும், ஹதீதின் போதனைப்படியுமே தீனுல் இஸ்லாம் அமைந்திருக்கிறது. இதை நாம் ரஸூலுல்லாஹ்வின் மார்க்கம் என்றும், நபியின் அடிச்சுவடு என்றும் உஸ்வயே ஹஸனா என்றும் கூறுகின்றோம். இதெல்லாம் வாஸ்தவமானவையாகும். குர்ஆனுடைய கட்டளைகளையும் போதனைகளையும், நபிகள் பெருமானார் முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள், தம் அனுஷ்டான பூர்வமாய் செயல் முறையில் செய்து 'இதுதான் இஸ்லாம்' என்று நமக்குப் போதித்து வழிகாட்டிச் சென்றுள்ளார்கள். யாரேனும் இந்த ஸுன்னத்துக்கு விரோதமாய் நடந்து கொண்டால் அவர் ஒரு போதும் சன்மார்க்க லக்ஷியமாகிய நஜாத்தை அடைய முடியாதென்றும் நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்) அவர்கள் போதித்துச் சென்றுள்ளார்கள்.

இங்ஙனமிருந்துங்கூட, 'உம்மத்தே முஹம்மதியா' என்னும் நம் முஸ்லிம் சமூகத்தினர், இஸ்லாமிய தத்துவத்தை புறக்கணித்து விட்டார்கள். திருநபியின் அழகிய செயல்முறை நமூனவாகிய 'உஸ்வயே ஹஸனு'வை கைசோர்ந்து விட்டார்கள்.

இஸ்லாத்தின் பண்டைச் சரிதையை சற்று சிந்தித்துப் பாருங்கள். நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களின் புனித ஜீவிய கால இறுதியில், இஸ்லாத்தின் தத்துவம், அதன் ரூஹு, அதன் இலக்ஷியம்-பரிபூரணமாக எல்லோர் அனுஷ்டானத்திலும் இருந்தது. எனவே இதைக் கண்டு பேரானந்தம் கொண்டார்கள் நபிகளுதர் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள். "இன்று நான் உங்களுக்கு உங்கள் 'இஸ்லாம்' சன்மார்க்கத்தை பரிபூர்ணமாய் செய்து விட்டேன்; உங்களிடமிருந்து இஸ்லாம் மார்க்கத்தை சந்தோஷத் திருப்தியுடன் ஏற்றுக் கொண்டேன்" என்று அல்லாஹு தஆலாவும் திருவுளமானுன்.

இந்த இஸ்லாமியப் பரிபூரணத் தன்மை, குலபாயே ராஷிதீன்களாகிய நான்கு பெரும் கலீபாக்கள் காலம் வரை நீடித்திருந்தது. அந்தோ, அதன் பிறகு இஸ்லாமிய ஜீவாதார லக்ஷியத்தில் சோர்வு ஏற்பட்டது; பின்னல் வந்த தலைவர்கள், தங்கள் சுயநலன்களைக் கொண்டு வந்து, இஸ்லாம் மதவிஷயத்தில் புகுத்திக் கொண்டார்கள். தம் இஷ்டம் போல், பல கொள்கைகளையும் எண்ணங்களையும் இஸ்லாத்தின் பெயரால் சேர்த்துக் கொண்டார்கள்.

இதனல் இஸ்லாத்தின் கட்டுப்பாடு போயிற்று. சமத்துவம் சீர்குலைந்தது; சகோதரத்வம் மறைந்தது; கட்சிப் பிரதிகட்சிகள் தோன்றின; ஷரீஅத்தில் பிரிவினைகள் உண்டாயின. சச்சரவுகள் தோன்றின. அனர்த்தம் உண்டாயின. சண்டைச் சச்சரவுகளும் தோன்றின. படுகளங்களும் கொலைகளும் உண்டாயின. அநியாயக்காரர் ஒரு கட்சியாகவும், நியாயஸ்தர் ஒரு கட்சியாகவும் பிரிந்தனர். ஒரு சாரார் தம்மை ஷீஆ என்றும், ஸையித்-ஸாதாத் என்றும், அஹ்லெ பைத் என்றும் சொல்லிக் கொண்டு பெருமைப்படலானுர்கள். மற்றொரு சாரார், "எங்கள் திருநபி முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் கொடுத்துச் சென்ற குர்ஆன்-ஹதீதே எங்களுக்குப் போதும்; கித்தாபு பிரகாரமும் ஸுன்னத்துப் பிரகாரமும் அமல் செய்ய வேண்டியதே எங்கள் கடமை; இது விஷயத்தில் நாங்கள்

ஸுன்னீகள்—சன்மார்க்கத்தை பேணுபவர்கள்'' என்று கூறி நேரிய முறையில் நடந்து கொள்ளலானுர்கள்.

இது மட்டுமல்ல. வேறுவிதமான பல பிரிவினைகளும் இக் காலே இஸ்லாத்தில் உண்டாய் இருக்கின்றன. ஊருக்கு ஒரு கட்சி யும், நாட்டு ஒரு வகுப்புமாக நம் முஸ்லிம்கள் பிரிந்து போயிருக்கி ருர்கள். காதியானி என்றும், அஹ்மதீ என்றும் எத்தனையோ பிரிவினைகள் நம்மில் உண்டாய் விட்டன. போதாக்குறைக்கு பீர், மஷாயிக் என்ற பேர்வழிகளும் தோன்றி, பாமரமக்களைப் பல துறையிலும் வழி கெடுத்து வருகிருர்கள்.

அந்தோ! நம் முஸ்லிம் சமூகம் முன்னேறும் மார்க்கம் எது என்று பாமர மக்கள் தெரிந்துகொள்ள முடியாமல் தவிக்கின்றனர். எம் அருமந்த முஸ்லிம்காள், அல்லாஹ்வுக்குப் பயப்படுங்கள்; ரஸூ லுல்லாஹ்விடம் விசுவாசம் என்னும் முஹப்பத்து வையுங்கள். அல்லாஹ்வின் கட்டளைகள் என்னென்ன? லோக தயாளர் ஸையி தின முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுடைய உண்மை யான போதனை என்ன? வென்று ஓர்ந்து பாருங்கள். அவ்விரண்டை அனுசரித்துக் காணப்படும் சன்மார்க்க விஷயங்களை மட்டும் ஏற்றுக் கொள்ளுங்கள். அதற்கு விரோதமாயிருக்கும் விஷயங்களை இஸ்லாத் துக்கு முரணுனவை என்று ஒதுக்கித் தள்ளுங்கள். நற்குண நல் லொழுக்கத்தில் ஈடுபட்டு, எப்போதும் உத்தமர்களாக இருக்க முயலுங்கள்.

முஸ்லிம்களே, இஸ்லாமிய உலகத்துக்கே இப்போது நெருக்க மான காலம் நேரிட்டிருக்கிறது. இஸ்லாமிய மக்களின் வாழ்வுக்கே ஒரு சோதனைக் காலம் காணப்பட்டு வருகிறது. இப்படிப்பட்ட ஆபத்தான சமயத்தில் நாம் நம் இஸ்லாமிய சகோதரத்துவத்தை கை நழுவ விடக்கூடாது; நமக்குள் எத்தகைய விரோதத்தையும் மனஸ்தாபத்தையும் வைத்துக் கொள்ளக் கூடாது.

முஸ்லிம்கள் முன்னேறுவதற்கு பிறரிடத்தில் போய் பரிகாரம் கேட்க வேண்டிய அவசிய மில்லை. திருக்குர்ஆனின் கட்டளையும், ஹதீது ஷரீபு போதனையுமே நமக்கு முன்னேற்றப் பாதையை காட் டிக் கொடுக்கின்றன. இதனைப் பின் பற்றி ஒழுகி, நலம் பெற்று, நானிலத்தில் நாமெல்லோரும் உய்வோமாக. வஸ்ஸலாம்.

# அனாதை அஷ்ரப்.

நெ. மு. கவுஸ்.

"அப்பா! இனி நான் எங்கு செல்வேன்? என்னை யார் ஆதரிப்பார்கள்? அம்மாவின் ஏக்கத்தையும் உன்னுடைய ஆதரவில் மறந்து விட்டிருந்தேனே! என்னை மட்டிலும் தனியாக விட்டு சென்றிரே! அப்பா!" என்று குமுரி கொண்டிருந்தாள் அஷ்ரப்.

அஹமத் செவி கொடுத்துக் கேட்டுக் கொண்டிருந்தான். தான் செய்த தவறுதலுக்காக ஒரு பெண்ணை அனாதையாக்கி விட்டோமே என்று துயரக்கடலில் மூழ்கிகிடந்தான். பக்கத்தில் இருந்த மதில் கடிகாரம் மணி ஓசை எழுப்பியது நிமிர்ந்து பார்த்தான் அஹமத்.

மணி ஒன்று ஆகிவிட்டது. அப்பா எதிர் நோக்கிக்கொண்டு இருப்பார் என்று மனதில் பலவாறு எண்ணங்கொண்டிருந்தான். இதற்குள் ஒரு பையன் ஓடிவந்து, "டாக்டர் அய்யா உங்களைக் கூப்பிடுகிறார்" என்றான்.

டாக்டரை சந்திக்க சென்றான் அஹமத். டாக்டரின் அறையை அடைந்ததும் திடுக்கிட்டான். அவனுடைய அப்பா டாக்டரின் பக்கத்தில் ஒரு சாய்வு நாற்காலியில் அமர்ந்து இருந்தார்.

அஹமதின் அப்பா, அவனைக்கண்டதும் "இப்படி வா அஹமத்! எப்படி சம்பவம் நேர்ந்தது?" என்று பலவாறு கேள்விகள் கேட்டுகொண்டிருக்கையில் அஹமத் குறுக்கிட்டு, உங்களுக்கு எப்படி அப்பா தெரியவந்தது? என்றான். "டாக்டர் போன் செய்தார்" என்றார் அஹ்மத்தின் அப்பா. நோயாளிகளைக் கவனித்து கொண்டிருந்த டாக்டர் அஹமதின் அப்பா பக்கம் திரும்பி, "இன்னும் இரண்டு மணி நேரத்தில் சவத்தைக் கொடுக்கச் செய்கிறேன், போலீஸில் பதிவு செய்ய வேண்டும். போலீஸுக்கு தகவல் கொடுத்திருக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டிருக்கையில் இரண்டு ஜவான்களும் சப்இன்ஸ்பெக்டரும் டாக்டர் அறைக்குள் நுழைந்தார்கள். சப்இன்ஸ்பெக்டர் அஹமதை பலவாறு கேள்வி கேட்டு அஹமதின்பேரில் குற்றச்சாட்டு பத்திரிகை பதிவு செய்து கொண்டு எல்லோருமாக கிழவன் செத்துகிடக்கும் அறைக்குள் சென்றனர். கிழவன் பக்கத்தில் துயரத்தில் ஆழ்ந்து கிடந்த அஷ்ரப் டாக்டரை கண்டதும், "டாக்டர்! இனி என்னை ஆதரிப்பார் யாரும் இல்லையா? பாவி, என் அப்பாவை கொன்று என்னை அனாதையாக்கி விட்டானே!" என்று கூறி கண்ணீர் வடித்தாள்.

அஹமதின் அப்பா அஷ்ரப் பக்கத்தில் சென்று "அம்மா! அழாதே! இனி என் வீட்டில் நீ கவலையின்றி சுதந்திரமாக வாழலாம்!" என்று ஆறுதல் சொல்லி கொண்டிருக்கையில் சப்இன்ஸ் பெக்

டர் அஷ்ரப்பின் வாக்குமூலத்தைப் பதிவுசெய்து கொண்டு, சவத்தை பிரேத பரிசோதனைக்குக் கொண்டுபோக உத்திரவு பிறப்பித்தார்.

அஹமதின் அப்பா அக்பர் ஸாஹிபுஅந்த ஊரில் ஒரு பெரிய ஸ்தாபனத்தைநடத்தி வந்தார். அவரை தெரியாத அதிகாரிகளே கிடையாது.

அஹ்மதை ஜாமினில் விடுவித்து அஷ்ரப்பை தாமே பாது காத்துகொள்வதாக ஏற்றுகொண்டார் அக்பர் ஸாஹிபு. அக்பர் சாஹிபு அஹ்மதை நோக்கி அஷ்ரப்பை கூட்டிகொண்டு வீட்டுக்கு போகும்படியாக சொல்லி விட்டு அதிகாரிகள் காரிலேயே சவகிடங் கிற்கு சென்று விட்டார். அஹமத், அஷ்ரப்பை கூட்டிக்கொண்டு வீடுவந்தடைந்தான். அஷ்ரப் அஹமதின் இல்லத்தைக் கண்டு வியந்தாள். அஷ்ரப், "இது உங்கள் பங்களாவா" என்று கேட்டாள். "ஆம்," என்றான் அஹமத். அஷ்ரப், அஹமதின் கால்களில் விழுந்து "என்னை மன்னியுங்கள்!" என்றாள். இதற்குள் சவத்தை அடக்கம் செய்துவிட்டு திரும்பிவந்த அஹமதின் அப்பாவின் கால் களிலும் விழுந்தாள் கண்ணீரும் கவலையுமாய் அஷ்ரப்.

அக்பர் சாஹிபு, பிள்ளைகளின் பேரில் மிகுந்த அன்பு கொண்ட வர்; ஏழை எளியவர்கள் மீதும் பற்றுதல்கொண்டவர். அஹமதும், அப்பாவைப் போலவே நற்குணங்கள் கொண்டவன். ஆனால் இவன் அண்ணனோ இதற்கு நேர்மாறாக இருந்தான். அக்பர் சாஹிபு பிள்ளைகளின் பேரிலும் மட்டும் அன்பு கொள்ளாமல் தமது வேலையாட்கள் இடமும் அன்பை காட்டி வந்தார். ஏதேனும் பிழைகள் வேலையாட்கள் செய்ய நேர்ந்தாலும் கடினமான சொற் களைப் பேசமாட்டார். ஏன்? அவரும் பதினெட்டு வருஷங்களுக்கு முன் ஒரு தொழிலாளியாக வேலைப்பார்த்து வந்தவர்தான். தமது வாழ்க்கையில் இன்ப துன்பத்தை அனுபவித்து முன்னுக்கு வந்தவர். பதினெட்டு ஆண்டுகளுக்கு முன் குமாஸ்தாவாக இருந்து விடுதலை பெற்று சொந்தமாக சிறு ஜவுளிக்கடை ஒன்றை வைத்து கடைவைத்த அந்த வருஷமே தன் மாமன் மகளை மணந்து இல்லற வாழ்க்கை நடத்தி வந்தார். இவர்களுக்கு இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்தன—மூத்தவன் பெயர் அக்தர், இளையவன் தான் அஹமத். அஹமத் பிறந்த வருஷம் இவர் வியாபாரத்தில் ஏராள மான லாபம் கிடைத்ததினால் அஹ்மத் அதிர்ஷ்டசாலி என்று அவ னிடம் பேரன்பு கொண்டிருந்தார்.

அஹ்மத் அதிர்ஷ்டசாலி மட்டுமல்ல மதாசார விஷயங்களிலும் கல்வியிலும் வியாபார துறையிலும்-நன்கு தேர்ச்சிபெற்று வருவதைக் கண்டு அவன் அப்பா வியந்தார்.

அக்தரோ அஹ்மதின் கொள்கைகளுக்கு நேர்மாறாக இருந் தான். எப்போழ்தும் சூதாட்டத்திலும் விலைமாதுகளின் சேர்க்கை

யிலும் மது அருந்துவதிலும் மூழ்னந்து கிடந்தான். இதைக் கண்டு இவன் அப்பா வெறுத்தார்; ஊராரும் வெறுத்தனர்.

இவனை சீர்திருத்தஞ் செய்யும் பொருட்டு எத்தனையோ மார்க்கங்களில் அவன் அப்பா முயற்சி செய்து பார்த்தார். சீர்திருந்துவான் என்ற நோக்கம் இல்லாதது கண்டு அவர் மனம் நொந்தார்.

அஹ்மத் பிறந்து ஐந்து வருஷங்களுக்குப் பின் தாயை இழந்தான். அஹ்மதின் அப்பாவும் மனைவியின் அன்பினுலும் பிள்ளைகளின் பாசத்தாலும், தாம் இரண்டாந்தாரம் செய்வதை கைவிட்டார்.

காலம் கடந்தது. அஹ்மத் 10-ம் வகுப்பில் படித்து கொண்டிருந்தான். இவன் வீட்டிற்கும் பள்ளிக்கூடத்திற்கும் கொஞ்சம் தொலைவாக இருந்தது கண்டு இவன் அப்பா சைக்கிள் வாங்கி கொடுத்திருந்தார். காலை மாலை இரு நேரமும் சைகிளில் சென்று வந்தான் அஹ்மத். அன்றும் வழக்கம் போல் பள்ளிக்குச் சென்று இல்லம் நோக்கி வந்து கொண்டிருக்கும் வழியில் ஒரு 15 வயது பெண் கண்பார்வை இழந்த கிழவன் ஒருவருக்கு வழி காட்டிக் கொண்டு சென்று கொண்டிருந்தாள். அஹ்மதின் சைகிள் அந்தக் கிழவன் சமீபம் சென்று கொண்டிருக்கையில் 3-வயது சிறுவன் ஒருவன் குறுக்கேவர சிறுவனைக் காப்பாற்றும் பொருட்டு தனது சைகிளின் பிடியை திருப்பினுன். அந்தோ! சைகிள் கிழவன் மேல் மோதுண்டது! கிழவன் "அப்பா" என்று கதறிக் கொண்டே மூர்ச்சையானுன். அவனை அருகிலுள்ள ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்கு எடுத்து சென்றனர். சிலவினுடிகளுக்குள் கிழவன் உயிரை இழந்தான்.

எதிர்பாராத சம்பவம் என்று பஞ்சாயத்தார் தீர்ப்புக்கூறி அஹ்மதிற்கு விடுதலை அளித்தனர்.

அஷ்ரப் அனுதையாகி அஹ்மதின் வீட்டில் வாழ்ந்து வந்தாள்.

அஷ்ரபை அன்புடனும் ஆதரவுடனும் நடத்தி வந்தான் அஹமத். அவன் அப்பாவும் அஷ்ரபை அன்புடன் ஆதரித்து வந்தார். அக்தர் அஷ்ரப்பின் எழிலைக்கண்டு எவ்வகையிலாவது அவளை அடைய வேண்டும் என்று கெட்ட எண்ணம் கொண்டான்.

அஷ்ரப் எல்லோர் இடத்திலும் நன்கு பழக வந்தாள். தமது இல்லத்தில் இருப்பது போலேவே ஒரு குறைவு மின்றி இருந்து வந்தாள்.

அக்தர் அஷ்ரப் இடத்தில் இருமடங்கு அன்பை காட்டினுன். அனுதை அஷ்ரபும கள்ளங்கபடமில்லாமல் அவனுடன் பழகி வந்தாள். சில சமயங்களில் அவனுடைய செயல் கண்டு சிறிது அச்சமும் கொள்ளும்படி நேர்ந்தது. (தொடரும்.)

# கஸஸுல் அன்பியா

இதில் நபிமார்களுடைய சரித்திரங்கள் அடங்கியது.

இதில் முதலாவது அல்லாஹு தஆலா ஆதியாய் படைத்த படைப்புகளைப் பற்றியும், 1-வது பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாம், 2-வது ஷீது அலைஹிஸ்ஸலாம், 3-வது இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாம், 4-வது ஹாறூத் மாறூத் தென்னும் இரண்டு மலக்குகள், 5-வது நூஹ் அலைஹிஸ்ஸலாம், 6-வது ஹூது அலைஹிஸ்ஸலாம், 7-வது ஷத்தாது கட்டின இரமதாத்துல் இமா தென்கிற சுவர்க்கம், 8-வது ஸாலிஹ் அலைஹிஸ்ஸலாம், 9-வது இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம், 10-வது இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம், 11-வது இஸ்ஹாக் அலைஹிஸ்ஸலாம், 12-வது யஃகூபு அலைஹிஸ்ஸலாம், 13-வது யூஸுப் அலைஹிஸ்ஸலாம், 14-வது ஐயூபு அலைஹிஸ்ஸலாம், 15-வது ஸில்கிப்லி அலைஹிஸ்ஸலாம், 16-வது ஷுஐபு அலைஹிஸ்ஸலாம், 17-வது மூஸா அலைஹிஸ்ஸலாம், 18-வது கிலுறு அலைஹிஸ்ஸலாம், 19-வது இல்யாஸ் அலைஹிஸ்ஸலாம், 20-வது அல்யஸஉ அலைஹிஸ்ஸலாம், 21-வது அஷ்மவீல் அலைஹிஸ்ஸலாம், 22-வது தாவூத் அலைஹிஸ்ஸலாம், 23-வது ஸுலைமான் அலைஹிஸ்ஸலாம், 24-வது யூனுஸ் அலைஹிஸ்ஸலாம், 25-வது ஈஸா அலைஹிஸ்ஸலாம், 26-வது ஜக்கரியா அலைஹிஸ்ஸலாம், 27-வது யஹ்யா அலைஹிஸ்ஸலாம், 28-வது பீவி மரியம் அலைஹிஸ்ஸலாம், ஆக இவ்வளவு நபிமார்களுடைய கிஸ்ஸாக்களடங்கி யிருக்கின்றன. இந்த கிஸ்ஸாக்கள் யாவும் குர்ஆனில் பிரஸ்தாபிக்கப்பட்டவைகளாகும். இதை ஒவ்வொரு முஸ்லிமும் வாங்கிப் படிக்க வேண்டியது அவசியம்.

கலிகோ பைண்டு விலை ரூ. 9—8—0

ஷை அறபுத் தமிழ் ரவ்லதுல் அஸ்பியா-பீ-கஸஸுல் அன்பியா முதற் பாகம் றப்பு கலிகோ பைண்டு.

விலை ரூ. 6—0—0

ஷை இரண்டாம் பாகம் விலை ரூ. 7—0—0

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ், 5.

# பரோபகாரி.

எம். ஏ. மீருன் மொஹிதீன் எழுதியது.

எல்லோரும் தூங்கிக்கொண்டிருக்கின்றனர். பணக்காரர்களும் நடுத்தர வகுப்பாரும், தங்க இடமின்றி பாதையோரங்களில் தங்கள் குடும்பத்துடன் படுத்துறங்கும், உழைத்து உழைத்து ஓடாய்ப் போன பாட்டாளிகள் கூட்டமும், புதுமணத் தம்பதிகள் தாங்கள் முன்னிரவில் இன்ப குளத்தில் நீச்சலடித்து கைகால்களெல்லாம் ஓய்ந்துப் போய் களைப்புற்றவர்கள் எல்லோரும் தூங்கிக் கொண்டிருக்கின்றனர்.

தேன் நிலவு, தித்திக்கும் தென்றல், மின்னும் மின்சார விளக்குகள் அந்த அழகான நகரத்திற்கு தனி ஒரு சோபையைக் கொடுத்து அலங்காரமாக விளங்கியது. அதில் நாகரீக சாயல்படிந்த அருமையான பங்களா.

அந்தப் பங்களாவின் மாடியறை ஒன்றில் 50-வயது மதிக்கத் தக்க மாதொருத்தி தூக்கம் பிடிக்காமல் சாய்வு நாற்காலியில் படுத்த படி சிந்தனையை, கடந்து போன தன் வாழ்க்கையில் செலுத்திக் கொண்டிருந்தாள். அவளுடைய சிந்தனையின் ஓட்டம் 30-வருடங் களுக்கு முன்னேக்கிச் சென்று கொண்டிருந்தது.

குமாரசாமி தன் மனைவி கனகாவுடனும், குழந்தை கமலநாத னுடனும் ஒரு குறைவுமின்றி சுகமாக வாழ்ந்து வந்தார்கள். சீரும், சிறப்பும், செழிப்பும் கொஞ்சி விளையாடிய செல்வாக்கு உள்ள குடும்பம். கஷ்டப்படுகிறவர்களைக் கண்டு கருணையுடன் அவர்கள் குறைகளை அறிந்து கவலைகளைப் போக்கிய கண்ணிய முள்ள குடும்பம். யார் கேட்டாலும் இல்லை என்று சொல்லாது வாரி கொடுத்த வள்ளல் குடும்பம்.

அப்பேர்பட்ட குடும்பம் காலச்சக்கரத்தின் அடியில் சிக்கி விட்டது. உலகம் உருண்டையாக இருந்து கொண்டு சுற்றிக்கொண்டு வருவதைப்போல், பணமும் ஒரு இடத்தில் நிலையாக நில்லாமல் பல பேரிடம் கைமாறிக்கொண்டு வரும் உலகத்தின் போக்குப்படி, குமார சாமியின் குடும்பமும் காலவித்தியாசத்தினல் சொத்து, சுகம், வீடு, வாசல் எல்லாவற்றையும் இழந்து, ஊர்கோடியில் குடிசை யொன்று போட்டு அதில் வாழ்ந்து வந்தார்கள். கால் வயிறு கஞ்சிக்கும் வழி இல்லாமல், வகையொன்றும் புரியாமல் பட்டினியால் வாடி வதங்கி னர்கள்.

நன்ருக வாழ்ந்த குடும்பம். இன்று நாதியற்ற நிலமையில் கேட்பாரின்றி, சீந்துவாரின்றி, சிதைந்து நிற்கிறது; இன்பம் பொங்

கிய தங்கக் குடும்பம், இழிவான நிலமையில் இருக்கிறது, இரக்கத்தின் பிறப்பிடமாக இருந்த குடும்பம், நேர்மையின் இருப்பிடமாக விளங்கியக் குடும்பம், கருணையின் வடிவமாகத் தோன்றியக் குடும்பம் வாழ்வை எல்லாம் இழந்து வயிற்றுப் பிழைப்புக்கு வகையறியாது வறுமையால் வாடுகிறது. நல்லவர்களைத் தானே அந்த நாயனும் நன்ருகச் சோதனைச் செய்கிருர் அவர்கள் வாழ்க்கையில் தானே விதி என்ற விளையாட்டை விளையாடுகிருர்.

குமாரசாமியின் நல்லெண்ணத்திறைல், இரக்கமுள்ள இதயத்திறைல், நேர்மையான நெஞ்சினல் எத்தனையோ குடும்பங்களும், நண்பர்களும் நல்ல நிலைமையில் வாழ்கிருர்கள். அப்படி இருந்தும் குமாரசாமியின் துன்பத்தை அறிந்தும் ஒருவராவது உதவி செய்ய முன்வரவில்லை. அப்படிக் கண்டாலும் காணுதவர்கள் போல் சென்று விடுகிருர்கள்.

இதை எல்லாம் அறிந்த குமாரசாமியின் உள்ளம் மிகவும் வேதனை அடைந்தது. வேலைக்காக அலைந்தார், திரிந்தார், ஒரு ஆபீஸ், தொழிற்சாலை பாக்கியில்லாமல் ஏறி இறங்கிவிட்டார். எங்கும் வேலை காலியில்லை என்ற பதிலைத் தவிர அவருக்கு வேலைக்கொடுப்பதற்கு எவரும் முன்வரவில்லை.

என்ன செய்வார், வறுமையோ வாட்டுகிறது. வேலையோ யாரும் கொடுக்கவில்லை. வயிருே பசியால் துடிக்கிறது. கையிலோ காலணுக் கிடையாது. யார் கொடுத்து உதவுவார்கள். இவரைப் போல் எல்லா மனிதர்களும் இருந்து விட்டால் வறுமை ஏன் ஏற்படுகிறது? அந்த வறுமையால் தீராத நோய் ஏன் உண்டாகிறது?

இந்த நிலையில் யாரிடம் போய் உதவிக் கேட்பது. யார் நமக்கு உதவி செய்வார்களென்று நினைத்துக் கொண்டிருக்கும் பொழுது அவருடைய மனைவி என்னங்கோ அண்ணுவிடம் போய் ஏதாவது வேலையோ அல்லது பணமோ கேட்டுப் பாருங்கள். கட்டாயம் நமக்கு உதவி செய்வார். அண்ணு சீமானுக வாழ்கிருர். இல்லை என்று சொல்ல மாட்டாரென்ருள்.

தன் மைத்துனன் புருஷோத்தமன், மனைவியின் உடன்பிறந்த சகோதரன் சீமானுக, மோட்டார் கம்பெனியின் முதலாளியாக, மாளிகை வாசியாக வாழ்கிருன். அவனிடம் சென்ருவது உதவி கேட்கலாமென்று நினைத்து அவன் வீட்டிற்குச் சென்று தன் கஷ்டநிலையை விளக்கி தனக்கு ஒரு வேலையோ, பண உதவியோ செய்யும்படி கேட்டார்.

அதற்கு புருஷோத்தமன் "உங்களுக்கெல்லாம் நான் கொடுத்துக் கொண்டிருந்தால் உங்களைப்போல் நாங்களும் நடுத்தெருவில் நிற்க வேண்டியதுதான். பணமிருக்கும் பொழுது யார் யாருக்கெல்லாம் கொடுத்து உதவிசெய்தாயே அவர்களிடம் போய்க் கேட்பது தானே?

கண்டவர்களுக்கெல்லாம் கொடுத்து காசைக் கரியாக்கினுயே அதன் அருமை இப்பொழுது தெரிகிறதா. ஒரு குடும்பத்திற்கு பெண் எவ்வளவு அவசியமோ அதைவிட ஒருபங்கு அதிகமாக பணம் அவசியம். பணம் இருந்தால் மட்டும் போதாது. அதைப் பேணி பாது காக்க வேண்டிய அறிவும், திறமையும் இருக்க வேண்டும். இப் பொழுது என்னுல் ஒன்றும் செய்ய முடியாது. போய் வா'' என்ருன்.

"அப்படிச் சொல்லாதே புருஷோத்தமா. நாங்கள் நொந்துப் போய் இருக்கிரேம். உன் சொல்லம்புகளால் நொந்துப்போயிருக்கும் எங்கள் உள்ளத்தைத் தாக்கிப் புண்படுத்தாதே. நாங்கள் சாதத் தைக்கண்டு எத்தனையோ நாட்களாகின்றன. பசிப்பட்டினியால் புழுங்கிச் சாகாமல் செத்துக் கொண்டிருக்கிரேம். இரக்கம் காட் டப்பா, மனமிரங்கப்பா. உன் தங்கையின் முகத்தைப் பார்த்தாவது தயைக் காட்டப்பா'' என்ருர்.

"ஊரில் எவ்வளவோ இருக்கிறது கஷ்டங்கள். அதற்கு நானுப் பொறுப்பாளி. எனக்கும் தான் எவ்வளவோ நிறைய கஷ்டங்கள் இருக்கிறது. தனக்குப்போய்தான் தானம். எனக்கு வேலை இருக்கி றது. உன்னிடம் பேசிக்கொண்டிருக்க நேரமில்லை. போய் வா'' என்று சொல்லி விர்ரென்று உள்ளே சென்று விட்டான். தங்கையின் கணவ னென்றும் பாராமல் கொஞ்சமும் நெஞ்சிலே இரக்க மின்றி நாயை விரட்டுவதைப் போல் விரட்டித் துரத்தி விட்டான். மன முடைந்துப் போய் வீடு வந்து சேர்ந்தார். சொந்த மைத்துனனே கருணைக் காட்டவில்லை என்ருல் அந்நியர்கள் எங்கே உதவப் போகிருர்கள். இது தான் உலகம். பணம் தான் இந்தக் காலத்திற்குப் பிரதானம். பணமில்லா விட்டால் பிணத்திற்குச் சமானமாக நினைக்கும் எண்ணமுள்ளவர்கள் தான். யோக்கியன் அயோக்கிய னுகவும் அயோக்கியன் யோக்கியனுகவும் கருதும் காலமிது.

சோர்ந்து போய் உட்கார்ந்திருக்கும் தன் கணவனைக் கண்ட கனகா அவரருகில் உட்கார்ந்து கால்களைப் பிடித்துக் கொண்டே "அண்ணு என்ன சொன்னர்?''

"என்ன சொல்வான். எல்லோரும் சொல்வதைப் போல் அவனும் சொன்னன். மற்றவர்களாவது இப்பொழுது வசதி இல்லை என்று சொன்னுர்கள். ஆனல், உன் அண்ணனே! நமக்கு உதவி செய்தால் அவர்களும் நம்மைப் போல் ஆகி விடுவார்களாம். மனிதப் பிறவியி லிருந்தே மாறி விட்டான் உன் அண்ணன். பணம் நிலையானது, நம்மை விட்டு எங்கும் போகாது என்ற கர்வத்தினுல் பேசி விட்டான் போல் தெரிகிறது. இன்று பணக் காரன். நாளைப் பராரி. இன்று பரதேசி. நாளைப் பங்களாவாசி. இந்த சூழ்நிலையில் போய்க் கொண்டிருக்கிறது உலகம். இதைச்

சற்றும் உணராமல் ஏதேதோ பேசி விட்டான். நாம் இருந்த நிலை என்ன? இப்பொழுது அநுபவிக்கும் வேதனை என்ன? நினைத் தோமா? எண்ணி இருப்போமா? இந்தக் கதிக்கு ஆளாகுவோ மென்று கனவிலும் கருதவில்லையே'' என்றார்.

''மனிதர்கள் மனமிரங்கவில்லை என்றாலும் மகேசுவரனுமா நம்மை மறந்து விடுவார். கடவுள் ஒருவர் இருக்கிறார் நம்மைக் காப்பாற்ற. அவர் நாடினால் நாளைக்கே நாம் பழய நிலைமைக்கு வந்து விடுவோம். நடப்பதெல்லாம் நல்லதிற்கு தான் நடக்கும். குறை யொன்றும் செய்ய மாட்டார் அந்தக் கருணா மூர்த்தி. நீங்கள் கவலைப் படாமல் தைரியமாக இருங்கள்'' என்றாள்.

''கடவுளாம் கடவுள். வெறும் கற்பனை கட்டுக்கதை வீண் பிரமை. கடவுள் ஒருவர் உண்டென்றால் கல்லினுள் தேரைக்கு உணவளிப்பது உண்மை யென்றால் கல்லின் மேல் மக்கள் கஞ்சி, கஞ்சி என்று கதறும் காட்சியைக் கண்டு அந்தக் கடவுள் ஏன் கண் திறந்துப் பார்க்கவில்லை? கருணை ஏன் உண்டாகவில்லை அவர் உள்ளத்தில்? கல்லினுள் தேரைக்கு உணவளிக்கும் அந்த உத்தமர் அவரால் உண்டாக்கப்பட்ட மக்களுக்கு ஏன் உணவளிக்கக் கூடாது? பசி, பசி என்று கூக்குரலிடும் பரிதாபக் குரலைக் கேட்டும் ஏன் அந்தக் காருண்ய சீலருக்கு பச்சாதாபம் ஏற்படவில்லை? உடம்பு வியர்வையை நிலத்தில் விழாமல் உண்டு கொழுத்து வயிறு வளர்க்கின்ற வேதாந்திகள் பேசும் வெட்டிப் பேச்சு. அவர்கள் கட்டி விட்ட கட்டுக் கதை. கடவுளாம் கடவுள் எங்கே இருக்கிறார்? யார் பார்த்தார்கள்? பெற்றெடுத்தவர்கள் யார்? தாய், தந்தை இல்லை என்றால் தானாக உண்டாகினாா? கடவுள் தானாக உண்டாகும் பொழுது உலகமும் உலகத்திலுள்ள சகலமும், மனிதர்களும் ஏன் தானாக உண்டாகக் கூடாது? கண்ணெதிரே உள்ள மனிதர்களே உதவவில்லை என்றால் கண்காணாத கடவுள் எங்கிருந்து உதவப் போகிறார்? கடவுளை எவ்வளவு நம்பி பூஜித்தேனோ அவ்வளவும் வெறுப்பாக மாறி விட்டது'' என்றார்.

''நீங்கள் மனம் நொந்து போய் பேசுகிறீர்கள். உள்ளம் உடைந்து பேசுகிறீர்கள். நீங்கள் பேசவில்லை. உங்களைப் பிடித்து துன்புறுத்தும் பிணி பேசச் சொல்லுகிறது. உங்களை வாட்டி வதைக்கும் வறுமை பேசச் சொல்கிறது. இப்பொழுது எதற் கெடுத்தாலும் இறைவனை குறைகூறி குற்றவாளியாக நினைக்கி றார்கள். கடவுள் இல்லை என்றால் உலகம் ஏன் உண்டாகப் போகிறது? நாம் தான் ஏன் பிறக்கப் போகிறோம். உலகத்தையும் உண்டாக்கி வாழ்வதற்கு சகல வசதிகளையும் ஏற்படுத்தி கொடுத் திருக்கிறார். அதை நல்ல வழியில் பயன் படுத்தாமல் தவறான வழியில் சென்றால் அதற்கு ஆண்டவனா பொறுப்பாளி? மனிதனைப்

படைத்து, அவனுக்கு அறிவைக் கொடுத்து, நல்லது கெட்டது எது என்று உணரச் செய்து அதற்கு தகுந்தபடி அவரவர்களுக்கு வசதி செய்தி கொடுத்து இருக்கும் பொழுது ஆண்டவனைத் தூற்றுவதிலும், ஆண்டவனே இல்லை யென்று சொல்வதும் கொஞ்சமும் பொருத்தமில்லை.

இன்பமும், துன்பமும் கலந்தது தான் வாழ்க்கை. அந்த வாழ்க்கை தான் இனிமையாக இருக்கும். துன்பம் இல்லை யென்றால் இன்பம் ஏது? துன்பத்தில் தான் இன்பம், கஷ்டத்தில் தான் களிப்பு, சஞ்சலத்தில் தான் சந்தோஷம்.

மழை வரும் பொழுது மேக மண்டலத்தை இருள் கப்பிக் கொள்கிறது மின் வெட்டுகிறது. இடி இடிக்கிறது. பிறகு ம்ழைப் பெய்கிறது. அதைப் போல் வாழ்க்கையில் இன்பமும், ஆனந்தமும் நெருங்கி வரும் பொழுது, துன்பம் தூரத்தும், கஷ்டம் கவலைகளை உண்டாக்கும். அந்தக் கவலை ஆளையே கொன்று விடும். ஆனால், அந்தக் கவலைகளுக்கு இடம் கொடுக்காமல், மனம் தளராமல் போராடி வாழ்க்கையில் வெற்றி ஏற்படச் செய்து இன்பத்தை உண்டாக்க வேண்டும்.

இதை உணராமல் சில கோழைகள் தற்கொலை செய்து கொள்கிறார்கள். சிலர் கடவுளையும், மனிதர்களையும் குறை கூறுகிறார்கள். அவர்களைப் போல் தான் நீங்களும் கடவுளை குறை கூறுகிறீர்கள்.

நாம் யாருக்கும் ஒரு துரோகமும், மோசமும் செய்யவில்லை. நெஞ்சிலே நீதியுடனும், எண்ணத்திலே தூய்மையுடனும் நாம் எல்லோரிடத்திலும் பழகி வந்தோம். நாம் கெட்டு விட்டாலும் பிறரை கெடுக்கக் கூடாது என்ற உயர்ந்த எண்ணத்துடன் தான் நடந்து வந்தோம். சிலரைப் போல் பொறாமை, பொச்சரிப்பு, சூது வஞ்சகம், மோசம் என்ற எண்ணம் உள்ள உள்ளம் கொண்டவர்கள் அல்ல நாம். நமக்கும் ஒரு நாளைக்கு அந்த ஆண்டவன் நல்ல வழியைக் காட்டுவார். அவர் ஒருவர் இருக்கிறார் நம்மைக் காப்பாற்ற. நீங்கள் வீணாகக் கவலைப்பட்டுக் கொண்டு உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள். எல்லாம் நன்மைக்கு தான் நடக்கும்'' என்றாள்.

''நீ என்னமோ பழைய பல்லவியையே பாடுகிறாய். ஹூம். அதையும் பார்ப்போம்'' என்றார்.

சில வீடுகளில் வேலை செய்து அதில் கிடைக்கும் ஊதியத்தை கொண்டு குடும்பத்தைக் காப்பாற்றி வந்தாள். நல்ல வருமானம் உள்ளவர்களே இந்தக் காலத்தில் குடும்பத்தை நடத்த முடியவில்லை என்றால் வீட்டு வேலை செய்து வயிற்று ஜீவனத்தை எங்கே கழிக்க முடியும். கனகா கொண்டு வரும் ஊதியம் கால் வயிற்றுக் கஞ்சிக்கே போதவில்லை.

இவர்கள் பசியால் வாடுகிறது போதாமல் இரண்டு வயதுள்ள குழந்தையும் அவர்களுடன் பசியால் துடித்தது. பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த தாய், தன் பத்தரை மாற்றுத் தங்கம் பசியால் கதறும் பரிதாபக் காட்சியைக் கண்டு அவளுடைய கண்கள் குளமாகி விடும்.

தன் வயிற்றிலே வளர்ந்த வைடுரியம், பட்டினிக் கிடந்து வதங்குவதைக் கண்டு அவளுடைய பெற்ற வயிறு பற்றி எரியும்.

பட்டாடை உடுத்தி, பொன்னும், மணியும் பூட்டி, மழலை மொழி கேட்டு, சின்னஞ் சிறுவனின் சிங்கார முகத்தைக் கண்டு மகிழ வேண்டிய தாய், வெற்றுடலோடு நலிந்து, மெலிந்து இருப்பதைக் கண்டு அவளுடைய இதயம் குமுறும்.

பாலூட்டி, சீராட்டி, தங்கத் தொட்டிலிலே தாலாட்டி தூங்க வைக்க வேண்டிய தாய் கட்டாந்தரையில் கட்டையாக கிடக்கும் கட்டிக் கரும்பை, கற்கண்டு சீனியைக் கண்டு அவளுடைய உள்ளத்தை வேல் கொண்டு தாக்குவது போல் இருக்கும். என்ன செய்வாள். இதை யெல்லாம் கண்டு மனதின் வேதனையை, இதயக் குமுறலை அடக்கி நெஞ்சைக் கல்லாக்கிக் கொண்டாள்.

சரியான ஆகாரமில்லாமலும் கவலை என்ற நோயை பிடித்துக் கொண்டதினாலும் குமாரசாமி படுத்த படுக்கையாகி விட்டார். டாக்டரிடம் அழைத்துச் செல்வதற்கோ பணமில்லை. கொடுத்து உதவி செய்பவர்களும் யாருமில்லை. வேலை செய்கிற இடங்களிலோ அதிகமாக பணம் வாங்கி இருக்கிறது சம்பளத்தைவிட. அண்ணனே அந்நியனாகப் பாவிக்கிறான். அபலைப் பெண் எங்கெல்லாமோ பணத்திற்கு அலைந்தாள். பலன் ஒன்றுமில்லை.

நாளுக்கு நாள் பலஹீனம் அடைந்த குமாரசாமி ஒரு நாள் தன் மனைவியை அருகில் அழைத்து உட்காரவைத்து "நீ செய்யும் முயற்சி என் வியாதியைப் போக்காது. என்னைப் பிடித்துக் கொண்டு இருக்கும் வியாதியை எந்த டாக்டராலும் குணப்படுத்த முடியாது. இந்த வியாதிக்கு மருந்தே கிடையாது, மனநோய்க்கு மரணம் தான் சரியான மருந்து. என் காலம் நெருங்கி விட்டது. இனி மேல் நான் அதிக நேரம் இருக்க மாட்டேன்" என்று சொல்வதற்குள் மூச்சு வாங்க ஆரம்பித்து விட்டது.

"அப்படி எல்லாம் சொல்லாதீர்கள். நீங்கள் சீக்கிரமே குணமாகி விடுவீர்கள்" என்றாள் அழுது கொண்டே.

"அழாதே கண்ணு. நீ கொடுத்து வைத்தது அவ்வளவு தான். என் செல்வத்தை எப்படியாவது கஷ்டப்பட்டு டாக்டருக்குப் படிக்க வைத்து நல்ல மனிதனுக்கு. உயர்ந்தவனுக்கு. ஊரார் எல்லாம் போற்றும் உத்தமனுக்கு. நேர்மையுடனும், நீதியுடனும், நியாயத்திற்குக் கட்டுப்பட்டு மனிதனாக நடக்கச் சொல். என்னால் தான்

அவனுக்கு ஒன்றும் செய்ய முடியவில்லை. நான் கண்ட கனவு கனவாகவே முடிந்து விட்டது. நான் கண்டகனவை என் ஸ்தானத்தில் நீ இருந்து நனவாக நிறைவேற்று கண்ணே."

"அப்படிச் சொல்லாதீர்கள். நம் செல்வத்திற்கு நீங்கள்தான் எல்லாம் செய்யப் போகிறீர்கள். நீங்கள் குணமடைந்து விடுவீர்கள்."

"இல்லை கண்ணு" என்று சொல்லிக் கொண்டே கண்களை மூடி விட்டார். இந்தப் பேரிடியினால் நிலை குலைந்து விட்டாள். அவள் இதயமே வெடித்து விடும் போல் இருந்தது. இந்த அதிர்ச்சியினால் அவள் மூளை குழம்பி பைத்தியக்காரியாகி விட்டாள். எண்ணிய எண்ணங்கள், கட்டிய மனக்கோட்டைகள், கண்ட இன்பக் கனவுகள் எல்லாம் தரைமட்டமாக தகர்ந்து விட்டன. என்ன செய்வாள்? யாரிடம் போய்ச் சொல்வாள்? மாண்ட அவள் மாணிக்கத்தை மீட்டுத் தருபவர்கள் யார்? அவர் மீது விழுந்து கதறினாள். அவள் கண்களிலே கண்ணீர் காவேரி நதியைப் போல் கரைபுரண்டோடியது. அவள் மனம் அனலில் சிக்கிய புழுவைப் போல் துடிதுடித்தது. அவள் கதறலை அவர் கருணையுள்ளம் காது கொடுத்துக் கேட்கவில்லை. அவள் கண்ணீர் அவர் மனதைக் கரையச்செய்யவில்லை. அவள் மனதுடிப்பு அவர் இதயத்தைத் தொட்டு எழுப்பவில்லை.

உயிரில்லா உடலானாள். வற்றிய தடாகமானாள். மணமில்லா வாடிய மலரானாள். அவள் வாழ்க்கைப் பூஞ்சோலை பாலைவனமாகமாறி விட்டது. சஞ்சல மேகங்கள் அவளைச் சுற்றிலும் சூழ்ந்து கொண்டது. கதிரவன் தோன்ற முடியாத இருள் கப்பிக் கொண்டது.

தன் வாழ்க்கைப் பூஞ்சோலையில் குயில் போல் பாடலாம், மயில் போல் ஆடலாம், புள்ளிமானைப் போல் துள்ளி விளையாடலாம், என்று கனவு கண்ட கனகா கைக்குழந்தையுடன் கைம் பெண்ணானாள். வாழ்விழந்த விதவையானாள்.

இந்நிலையில் அக்கம் பக்கம் உள்ளவர்கள் இரக்கம் கொண்டு செய்ய வேண்டிய காரியங்களைச் செய்தார்கள். ஊர் ஏதாகிலும் சொல்லும் என்று நினைத்து கனகாவின் அண்ணன் புருஷோத்தமனும் பெயரளவில் துக்கம் விசாரித்து மயானம் வரை பிணத்துடன் சென்றான்.

நாட்களும், வாரங்களும், மாதங்களும், வருடங்கள் இருபதும் ஓடிவிட்டன. அந்த நகரத்தில் டாக்டர் K. K. நாதன் என்றால் புகழும், மதிப்பும் இருந்தது.

நல்ல கைராசிக்காரர் டாக்டர் நாதன். ஏழைகளுக்கு பணம் வாங்காமலே இலவசமாக வைத்தியம் செய்யும் இரக்கமுள்ள உத்தமர். காலம், நேரம் கருதாது சேவைச் செய்யும் கருணாமூர்த்தி என்றெல்லாம் அவரைப் பற்றி மக்கள் புகழ்ச்சியாகப் பேசிக் கொண்டார்கள்.

தங்கையின் மகன் பிரபல டாக்டராக பேரும், புகழுடன் வாழ்கிறான். ஊரிலே அவனுக்கு நல்ல மதிப்பும், மரியாதையும் இருப்பதை அறிந்த புருஷோத்தமரின் மனம் சந்தோஷம் அடைந்தாலும், தங்கையை ஆதரிக்க தவறி விட்டோம் என்ற எண்ணமும் அவர் உள்ளத்தை அரித்துக் கொண்டிருந்தது.

தன் வீடு தேடி வந்த அத்தானை அந்நியனைப் போல் நடத்தி உதவி செய்யாமல் மனம் நோகும்படி பேசி துரத்தி விட்டதை நினைத்து நினைத்து வேதனைப் பட்டார்.

வியாதியால் படுத்த படுக்கையாக இருந்த அத்தானை பார்க்காமலும், டாக்டரிடம் அழைத்துச் செல்வதற்கு தன் தங்கை பணத்திற்காக அலைந்ததை அறிந்தும் அயோக்கியனாக, உலோபியாக நடந்து கொண்டதைப் பற்றி வருந்தினார்.

தன் ஆசைத் தங்கை, அன்புத் தங்கை கணவனை இழந்து குழந்தை உடன் வீடுகளில் வேலை செய்து கஷ்டப்பட்டதைக் கண்டும் கருணையில்லாமல், பாசமில்லாமல், பற்று இல்லாமல், நேசமில்லாமல், நேர்மையில்லாமல் நியாயம் தவறி நடந்ததைப் பற்றி நினைத்துக் கண்ணீர் விட்டார்.

அண்ணன் சீமானாக, கோமானாக ஆநந்தமுடன் பங்களாவில் வாழ்கிறான். உடன் பிறந்த தங்கையோ வீடுகளில் வேலை செய்கிறாள் என்று ஊரில் பேசிக் கொண்டதை இன்று நினைத்துப் பார்த்தார். அவர் உள்ளம் புழுவைப் போல் துடி துடித்து வேதனைப்பட்டது.

நான் துரோகி, இரக்கமற்ற அரக்கன், இதயமில்லாத மனித மிருகம் என்றெல்லாம் தனக்குத் தானே பிதற்றிக் கொண்டு ஒரு நிமிஷமும் தாமதியாமல் காரை எடுத்துக் கொண்டு தங்கையின் வீட்டை நோக்கிச் சென்றார்.

அதே நேரத்தில் கனகாம்பாள் தன் மகனை அழைத்தாள். என்னம்மா என்றான் டாக்டர் K. K. நாதன். கமலநாதா இன்று ஒரு முக்கியமான விஷயம் ஒன்று கேட்க வேண்டும் உன்னிடம்.

என்ன விஷயம்மா கேளுங்கள் என்றான்.

"எனக்கு வயதாகி விட்டது. நீயும் தக்க பருவமடைந்து விட்டாய். உனக்கு துணை வேண்டு மல்லவா? ஆதலால் உன்னை மணப்பந்தலில் மாப்பிள்ளைக் கோலத்துடன் கண்டு மகிழ வேண்டும் என்று நீண்ட நாட்களாக என் உள்ளத்தில் ஆசை கொழுந்து விட்டெரிகிறது. அதற்கு தானப்பா உன்னை அழைத்தேன்" என்றாள்.

"இப்பொழுது எதற்கம்மா எனக்கு அந்தத் தொல்லை எல்லாம். துணைக்கு தான் நீங்கள் இருக்கிறீர்கள். உங்கள் அன்பை விடவா. உங்கள் ஆசையை விடவா. இப்பொழுது வேண்டாம்மா எனக்குக் கலியாணம்."

"அப்படி சொல்லாதேப்பா. தாயின் அன்பும், ஆசையும் வேறு. தாரத்தின் பாசமும், நேசமும் வேறு. நான் என்ன இன்னும் கொஞ்சம் நாட்கள் இருக்கப் போகிறேன். உன் ஆயுள் முழுவதும் உன் சுக துக்கங்களில் பங்கு கொள்ள ஒரு ஒப்புயர்வுள்ள துணை தேவை. நீ குடியும், குடித்தனமுமாக இருப்பதைப் பார்த்து விட்டு நிம்மதியாக கண்ணை மூடிவிடுவேன். உனக்கு அந்த ஒரு காரியமும் செய்து விட்டால் உன் தந்தை என்னிடம் ஒப்படைத்துச் சென்ற பொறுப்பு தீர்த்து கவலையில்லாமல் இருப்பேன்' என்றாள்.

"அப்பா என்ன பொறுப்பு உங்களிடம் ஒப்படைத்துச் சென்றாரம்மா?"

உன் தந்தை இறக்கும் பொழுது நீ இரண்டு வயது பால் மணம் மாறாப் பாலகனாக இருந்தாய் என்று, தான் வாழ்க்கையில் பட்ட கஷ்டங்களும், அநுபவித்த இன்னல்களையும் எடுத்துச் சொன்னாள்.

"நீங்கள் இதுவரையில் எனக்கு ஒரு மாமா இருப்பதாக சொல்லவே யில்லையே அம்மா. அவ்வளவு கொடூரமாகவா நடந்து கொண்டார். தங்கை என்ற பாசத்தை அவர் உள்ளத்திலிருந்தே எடுத்து விட்டாரென்று நினைக்கிறேன்."

யாரை குறைகூறி என்னப்பா பிரயோஜனம். எல்லோரும் நல்லவர்கள் தான். நம்மை பிடித்திருந்த தரித்திரம் அவர்களை அப்படிப் பேசச் சொல்லிற்று. உலகத்தில் கெட்டவர்கள் இருந்தால் தான் நல்லவர்களின் புகழ் தெரியும். அதெல்லாம் இருக்கட்டும்; என் ஆசையை தடுக்காமல், தடை யொன்றும் சொல்லாமல் சம்மதம் என்று சொல்லப்பா என்று சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது, "கனகா என்னை மன்னித்து விடம்மா" என்று புருஷோத்தமர் கனகாம்பாளின் காலில் விழப்போனர்.

"யார்? அண்ணவா! எழுந்திருங்கள் அண்ணு" என்றாள்.

"கனகா என்னை மன்னித்து விடம்மா. நான் பாவி. தங்கையைத் தவிக்கவிட்ட துரோகி. அத்தானை அநாவசியமாகப் பேசி உதாசீனம் செய்து உதறித் தள்ளிய உன்மத்தன். அத்தானை பரிதாப மரணத்திற்கு ஆளாக்கிய கொலைகாரன். பசியால் துடித்துக் கொண்டிருந்த உங்களை பரிவு காட்டாது பார்த்துக் கொண்டிருந்த இரக்கமற்ற அரக்கன் நான். கைக்குழந்தையுடன் வீடுகளில் வேலை செய்யும் காட்சியைக் கண்டும் கருணையில்லாத கயவன் நான். நீ பெண் தெய்வமம்மா. ஒருவர் உதவியையும் நாடாது வாழ்க்கையில் வெற்றிக்கண்ட வீரப் பெண்மணியம்மா நீ. வாழ்விழந்த உனக்கு வாழ்வளிக்கத் தவறிய வஞ்சகன். என்னை மன்னித்து விடு கனகா, மன்னித்து விடு. என்னை மன்னித்தேனென்று உன் வாயால் ஒரு வார்த்தைச் சொல்லம்மா" என்று குழந்தையைப் போல் தேம்பி அழுதார்.

"யார் யாரை மன்னிப்பது அண்ணு. மன்னிப்புக்குரியவர் அந்த ஆண்டவன் ஒருவனைத் தவிர வேறு யாருமில்லை. இங்கு குற்றம் புரிந்து தப்பித்து விடலாம். நாளை ஆண்டவனுடைய நீதி மன்றத்தில் அவனுடைய தண்டனையிலிருந்து யாரும் தப்ப முடியாது. ஆகவே, ஆண்டவனிடம் மன்னிப்பு கேளுங்கள். நிச்சயம் மன்னிப்பான்" என்ருள்.

"உண்மையில் நீ மனிதப்பிறவி யில்லையம்மா. தெய்வப் பிறவியம்மா. உன்னிடம் ஏதோ ஒரு சக்தி யிருப்பதினுல்தான் உன் வாழ்க்கையில் போராடி வெற்றிக் கண்டிருக்கிருய்" என்ருர்.

பெண்களெல்லாம் சக்திகள்தானேயண்ணு என்று சொல்லி இவன்தான் அண்ணு நம்ம கமலநாதன். டாக்டர் K. K. நாதன் என்று அழைப்பார்கள் என்ருர்கள்.

கமலநாதா என்று ஆசையோடு அணைத்துக் கொண்டார். கமலநாதனும், மாமா என்று அவரைத் தழுவிக் கொண்டான்.

இந்த காட்சியைக் கண்ட கனகாம்பாள் ஆனந்தக் கண்ணீர் வடித்தாள்.

கனகா உங்களுக்கு நான் செய்த கொடுமைகளுக்கு பிராயச்சித்தமாக என் மகள் கிரிஜாவைக் கமலநாதனுக்கு மனைவியாக்கப் போகிறேன். நீ வேண்டாமென்று மறுத்தாலும் கட்டாயக் கலியாணம் செய்து வைக்கப் போகிறேன். அத்துடன் அத்தான் பெயரில் ஆஸ்பத்திரி யொன்று கட்டி ஏழை, எளியவர்களுக்கு இலவசமாக வைத்தியம் செய்ய முடிவு கட்டிவிட்டேன். இனி கமலநாதன் உன் மகனல்ல. என் மகன். அவனுக்கு தாய், தந்தை எல்லாம் இனி நான்தான் என்ருர்.

உங்களிஷ்டம்போல் செய்யுங்களண்ணு.

நல்லதொரு சுபதினத்தில் கமலநாதனுக்கும், கிரிஜாவுக்கும் விவாகம் இனிது நடந்தேறியது.

அவர்கள் வாழ்க்கையின் துடக்கம் இன்பத்தின் எல்லையாகவும், ஆனந்தத்தின் அரங்கமாகவும், விளையாட்டு மண்டபமாகவும், அமைந்து, ஜோடிப் புருக்களைப் போல் களிப்புடன் கொஞ்சி, அன்பும், ஆசையும் பாசக்கயிற்றினுல் பிணைக்கப்பட்டு குதூகலமாக வாழ்ந்தார்கள். அந்த இன்பத்தின் சின்னமாக தங்க விக்ரகம் போல் ஒரு குழந்தை பிறந்தது.

குழந்தையின் அழுகுரலைக் கேட்டு கனகாம்பாள் தன் சிந்தனையிலிருந்து விடுபட்டு உள்ளே சென்ருள்.

முற்றிற்று.

---

# திருக் குர்ஆன் :: ::
# :: :: சார சங்கிரஹம்

## பல விஷயங்கள் பற்றிய பல ஆயத்துகள்.

(ரஹ்மத் பாகவி)

### யூஸுப் நபியின் சிறைவாச அனுபவங்கள்

(எகிப்து தேச அதிபதி அஜீஸும் இதர) ஜனங்களும், யூஸுப் (நபி) ஒழுக்கங் குலையாத தூயவர் என்று அத்தாக்ஷி எடுத்துக் கூறியும், (ஏதோ சில அசந்தர்ப்பங்களாலும் தெய்வ சங்கல்பத்தாலும்) அவரைக் கொஞ்ச காலம் சிறையில் போட்டு வைப்பதென்று (ஜுலேகாவுக்கு ஆதரவானவர்கள்) முடிவு செய்து விட்டார்கள். அங்ஙனம் (யூஸுப் நபியாகிய) அவர் சிறைச் சாலையில் இருந்து வந்த காலத்தில், யூஸுப் (நபி) உடன், இரண்டு வாலிபர்களும் கைதிகளாக சிறையில் பிரவேசிக்கப் பட்டார்கள். (அவ்விருவரில்) ஒருவன், அரசருக்கு மதுபானம் ஊற்றிக் கொடுத்துக் கொண்டிருந்தவன்; மற்றவன் சமையல் செய்து உணவு பரிமாறும் பரிசாரகன். (இருவரும் சேர்ந்து அரசருக்கு விஷம் புகட்ட முயன்றனர் என்ற குற்றச் சாட்டின் மீது, சிறை தண்டனை விதிக்கப்பட்டிருந்தனர்.) இவ்விருவரும் கனவுகள் கண்டார்கள். (யூஸுபு நபியை நோக்கி) அவ்விருவரில் ஒருவன் "நான் ஒரு கனவு கண்டேன்; அதில் நான் மதுபானம் பிழிந்து புகட்டக் கண்டேன்" என்றான். மற்றவன் "நானும் கனவு கண்டேன்; அதில் நான் என் தலை மீது ரொட்டித் தாம்பாளம் தூக்கிக் கொண்டிருந்தேன்; பட்சிகள் (என் சிரசு மீது அமர்ந்து) அதிலிருந்து கொத்தித் தின்று கொண்டிருந்தன-(தோழர்) யூஸுபே, எங்களுக்கு நீவிர், இதற்குரிய தஃபீரை (கனவு பலனைக்) கூற வேண்டுகிறோம்; ஏனெனின் நீவிர் எங்களுக்கு நல்லவராகவும் அறிவாளராகவும் காணப்படுகின்றீர்" என்று வேண்டிக் கொண்டனர்.

அதற்கு அவர் (யூஸுப் நபி), அவர்களுக்குப் பதில் உரைத்ததாவது :-"உங்களுக்கு தினமும், இச்சிறைச்சாலையில் சாப்பாடு கொண்டு வந்து கொடுக்கிறானே ஒருவன் அந்த ஆள், உங்களிடம் (இன்று) வருகிற நேரத்துக்கு முன்னடியாகவே, நான் உங்கள் கனவிற்குரிய பொருளை (தஃபீரை)க் கூறி விடுகிறேன். இந்த (சொற்பன) வித்தையை என்னுடைய இறைவன் எனக்குக் கற்பித்தருள் புரிந்திருக்கிறான். மேலும், அந்த அல்லாஹ்மீது விசுவாசம் கொள்ளாமலும், இறுதி (கியாமத்) நாள் வருமென்பதை நிராகரித்

துக் கொண்டு மிருக்கிறுர்களே (பாபிகள்), அவர்களுடைய பொய்யான மார்க்கத்தை விட்டும் நான் ஒதுங்கிக் கொண்டேன். மேலும் நான், என்னுடைய பாட்டன் பிதாவான இப்ராஹீம், இஸ்ஹாக், யஃகூப் ஆகிய நபிமார்களுடைய (ஏக தெய்வத்துவ) சன்மார்க்கத்தை பின்பற்றுகிறவனுக இருக்கிறேன். உலகிலுள்ள யாரையும் (எதையும்) அவ்வாண்டவனுக்கு இணையாக்கி வைப்பது எங்களுடைய கோட்பாடல்ல. (இங்ஙனம் நல் விசுவாசம் கொண்டு) நம்பி யிருப்பதும், எங்களுக்கும் இதர ஜனங்களுக்கும் இறைவன் அருட்பாக்கியம் புரிவதைக் கொண்டே ஆகும். ஆனுல், பெரும்பாலான மனிதர்கள், (இறைவனிடம்) நன்றி கெட்டவர்களாய் போய் விடுகிறுர்கள்."

மேலும் (யூசுப் நபி அந்த இருவர்க்கும் சொன்னதாவது:-) "என் இரு சிறைத் தோழர்களே, ஏராளமாக ஒவ்வொருவர்க்கும் வெவ்வேறு கடவுள்கள் இருப்பது நல்லதா? அல்லது, எல்லோருக்கும் பொதுவாக ஒரு மகத்தான கடவுள் ஏக நாயகனுக இருப்பது நல்லதா? (நீங்களே சொல்லுங்கள்;) ஏக இறைவனைத் தவிர்த்து (வேறு தெய்வங்களையும் மனிதர்களையும்) நீங்கள் பூஜிக்கிறீர்களே, அவையெல்லாம் வெறும் பெயர் பகட்டுக்கானவை யாகும். இந்த தெய்வப் பூஜையெல்லாம், உங்கள் பிதா பாட்டன்களால் ஏற்படுத்திக் கொள்ளப் பட்டவையாகும். (எல்லாம் வல்ல) இறைவன், அவைகள் விஷயமாய் (நம் மாந்தர்க்கு) எந்த விதமான அத்தாக்ஷி ஆதாரத்தையும் இறக்கி வைக்க வில்லை. உலகில் சர்வ காரியாதிகளும் அல்லாஹ்விஞலேயே நிகழ் பெறுகின்றன. அந்த இறைவன் போதிப்பது 'நீங்கள் அவ்வேக இறைவனையே வணங்க வேண்டும், இதுவே நேர்மையான சன்மார்க்கம்; ஆயினும் (மனிதரில்) பெரும்பாலானவர்கள் இந்த உண்மையை அறிந்துணர்வதில்லை" என்பதாகும்.

(இங்ஙனம், அச்சிறைத் தோழர்களுக்கு யூஸுப் நபி, சத்திய உபதேசங்கள் கூறிய பிறகு, இவ்வாறு கனவுக்குப் பொருளும் கூறலானர்:-) "ஏ என் சிறைச்சாலைத் தோழர்களே! (கேளுங்கள்) உங்களில் ஒருவன் (மது பிழிந்தவன்) இனியும் தன் (எஜமானஞன) அரசனுக்கு, மதுபானம் ஊற்றிக் கொடுப்பான். மற்றொருவன், (ரொட்டி சுமந்து பட்சிகளுக்கு இடம் தந்தவன் விதி வசத்தால்) தூக்கில் ஏற்றப்பட்டு மரிப்பான்; (காக்கை, கழுகு) பட்சிகள் அவன் (பிணத்தின்) சிரசை கொத்தித் தின்னும். இதெல்லாம் (இறைவனுல்) விதிக்கப்பட்டுப்போன விஷயங்கள். இதைப் பற்றியே நீங்கள் இப்போது வினவித் தெரிந்து கொண்டீர்கள்" என்பதாகும்.

(சிறைத் தோழர்களான) அந்த இருவரில், எவன் உயிர் தப்பி அரசனுடைய சமுகத்தை யடைவான் என்று யூசுப் (நபி) அறிந்தாரோ, அவனை (அதாவது மது புகட்டுபவனை) நோக்கி, "ஏ தோழனே (அப்போது) நீ, உன் எஜமான (னன அரச) னிடம் என்னைப் பற்றி (யும் நான் ஒரு குற்றமும் செய்யாதிருக்க, சிறையில் அடைபட்டு வாடுகிறேன் என்றும்) சொல்வாயாக" என்று கூறி வைத்தார்கள். ஆயினும் (விதிவசத்தால்) அந்தத் தோழன் அங்ஙனம் தன் எஜமானிடம் பிரஸ்தாபிப்பதை மறந்துப் போகும் படி, ஷைத்தானனவன் செய்து விட்டான். இதனல் யூஸுப் (நபி) பல வருஷங்கள் வரை, சிறையிலே கிடந்துழல வேண்டியதாயிற்று.

(ஸூரா: யூசுப்; ருகூ: 4, 5)


# மிஃ்ருஜுல் ஆரிபீன் பீ
# தர்ஜுமத்தி மின்ஹாஜில் ஆபிதீன்

(புதிய பதிப்பு)

"மிஃருஜுல் ஆரிபீன்" என்பது பதினன்கு இல்முகளுக்கும் ஓர் அலைகடலாகிய நாயகம் இமாம் கஸ்ஸாலி றஹிமத்துல்லாஹி அலைஹி அவர்கள் இயற்றியுள்ள ஞானநீதக் களஞ்சியமான 'மின்ஹாஜில் ஆபிதீன்' என்னுங் கிரந்தத்திலிருந்து வெகு நுட்பா நுட்பமாக மொழி பெயர்த்ததோர் அரிய சாதனமாகும்; அறிவுக்கு ஆகாரமாம். இதில் அடங்கி யிருக்கும் 'மஃரிபா' என்னும் தீட்சை ஞானத்தின் பாகுபாடுகளையும், நேர்வழிக்குரிய சாதனத் தெளிவுகளையும், யோகாப்பியாச முறைகளையும் பற்றி விவரித் தெழுத வேண்டுமானல் எவ்வளவு நீடித் தெழுதினலும் முடியாது. நோட்டமிட்ட நண்பர்களுக்கே இதன் அருமை விளங்கும்.

சுத்தத் தமிழ் கலிகோ பைண்டு ரூ. 4

அரபுத் தமிழ் றப்பு காகிதம் கலிகோ பைண்டு

(அச்சாகிறது) ரூ. 4—6—0

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

# நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் குர்ஆனின் நல்லுபதேசமும்.

## அத்தியாயம் 5

நானிலத்தோர்க்கு நல்வழி காட்டுவதற்காக நாயனால் தெரிந்தெடுத்து அனுப்பப்பெற்ற நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாக முன் அத்தியாயங்களில் கண்டோம். முஸ்லிமின் இலட்சணம், கடமைகள் முதலிய விஷயங்களைப் பற்றி அவர்கள் கூறி யிருப்பதைச் சிறிது கவனிப்போம்.

அமானிதத்தைப் பூரணமாகப் பூர்த்தி செய்பவனும் சொன்ன சொல் தவறாதவனும் வாக்குறுதியை நிறைவேற்றுபவனே முஸ்லிமாவான்.

* * *

வயது அதிகரிக்க அதிகரிக்க நற் செயல்களும் எவனுக்கு அதிகரிக்கின்றனவோ அவனே உங்களில் சிறந்த மனிதன்.

* * *

மனிதவர்க்கத்திடம் இரக்கம் காட்டாதவனிடம் இறைவனும் இரக்கம் காட்டமாட்டான்.

* * *

தீயவர்களின் தோழமையைவிட தனித்து உட்கார்ந்திருப்பதே நல்லது; தனித்து உட்கார்ந்திருப்பதைவிட நல்லவர்களுடன் அமர்ந்திருப்பது நல்லது. அமைதியாக அமர்ந்திருப்பதைவிட அறிவு பெற விரும்புபவனிடம் வார்த்தையாடுவது நல்லது; கெட்ட வார்த்தைகளைப் பேசுவதைவிட அமைதியாக இருப்பதே நல்லது.

* * *

உங்களில் என்னால் மிக நேசிக்கப் படுபவரும் மறு உலகில் எனக்குச் சமீபமாக இருப்பவரும் நல்ல நடத்தை யுடையவராகும்; நிச்சயமாக எனக்குப் பெரிய எதிரியும் என்னை விட்டுத் தூரமாக இருப்பவரும் கெட்ட குணம் படைத்தவராகும்.

* * *

அறிவு தேடிப் பெறுங்கள்; தீமையிலிருந்து நன்மையைப் பிரித்துணர்வதற்கு அது உகந்ததாக விருக்கிறது. சுவன லோகத்துக்குச் செல்லும் பாதையை அது துலக்குவதோடு பாலைவனத்தில் நமது நண்பனாகவும் தனிமையில் நமது தோழனாகவும் நண்பரில்லாதிருக்கும்போது நமது தோழனாகவும் இருக்கிறது. மேலும் சந்தோஷத்துக்கு நம்மை அது வழிநடத்திச் செல்கிறது; துன்பத்தில் நமக்குத் தேறுதல் அளிக்கிறது; நண்பர்களிடையே அது அணிகலனாகவும் எதிரிகளுக்கு விரோதமான கவசமாகவும் விளங்குகிறது.

* * *

நோயுற்றிருப்பவர்களைச் சென்று காணுங்கள்; ஜனஸாக்களுடன் கூட செல்லுங்கள்; ஏனெனில், மறு உலகைப்பற்றி நினைவூட்டுபவையாக அவை இருக்கின்றன.

* * *

ஒரு முஸ்லிம் அவனது மனைவியை வெறுக்கலாகாது; அவளிடம் காணும் ஒரு தீய அம்சம் அவனுக்கு அருவருப்பு அளிக்குமாயின், மற்ற நல்ல ஒரு அம்சத்தைக் கண்டு அவன் திருப்தி கொள்வானாக.

* * *

விதவைகளுக்கும் ஏழைகளுக்கும் ஜீவனோபாயம் அளிக்கும் ஒருவன் அல்லாஹ்வின் பாதையில் தானம் வழங்குபவனைப் போலவும் இரவு முழுவதும் (விழித்திருந்து) தொழுது கொண்டிருப்பவனைப் போலவும் ஒழுங்காக நோன்பு நோற்பவனைப் போலவும் இருக்கிறான்.

* * *

இறைவனிடம் கீழ்ப்படிதலுள்ள அடியார்களிடம் மிகச் சிறந்தவர்கள் எவர் என்றால் அவர்களைப் பார்க்கும்போது இறைவனை நினைவூட்டுபவர்கள்; மக்களில் கேடு கெட்டவர்கள் கோள் சொல்பவர்களும் குறும்பு செய்பவர்களும் நண்பர்களைப் பிரிப்பவர்களும் நேர்மையானவர்களிடம் குற்றங் குறைகளைத் தேடிக் கொண்டிருப்பவர்களுமாவர்.

* * *

அறிவு தேடி வீட்டை விட்டுச் செல்பவன் அல்லாஹ்வின் பாதையில் நடந்து செல்கிறான்.

* * *

இறைவனின் படைப்புகள் குறித்து ஒரு மணிநேரம் சிந்திப்பது எழுபது வருட தொழுகையைவிட மிக நல்லது.

* * *

ஒரு மணிநேரம் விஞ்ஞான அறிவு போதனைக்குச் செவி சாய்ப்பது ஆயிரம் ஷஹீது (தியாகி) களின் ஜனஸாக்களுடன் செல்வதைப் பார்க்கிலும் பயனுடையது; ஆயிரம் இரவுகள் நின்று தொழுவதைவிட நன்மை தருவது ஆகும்.

* * *

அறிவு தேடிப் பெறுங்கள்; ஏனெனில், அல்லாஹ்வின் பாதையில் அதனை அடைபவன் பக்திச் செயலொன்று செய்பவனாகிறான்; அதனைப் பற்றி பேசுபவன் இறைவனைப் புகழ்பவனாகிறான்; அதனை நாடித் தேடிச் செல்பவன் இறைவனைக் கண்ணியப் படுத்துபவனாகிறான்; அதனைப் போதிப்பவன் தானதர்மம் வழங்குபவனைப் போலாகிறான்; மற்றவனுக்கு அதனை எடுத்தோதுபவன் இறைவனுக்கு வணக்கம் செலுத்துபவனாகிறான்.

* * *

ஏ மக்களே! உங்களுக்கு உங்கள் மனைவியர்மீது உரிமைகள் உள்ளன; (அது போலவே) உங்கள்மீது உங்கள் மனைவியர்க்கும் உரிமைகள் உண்டு. இரக்க சிந்தையோடும் அன்போடும் உங்கள் மனைவியர்களை நடத்துங்கள். உங்களிடம் வைக்கப்பட்டுள்ள நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கொள்ளுங்கள்; பாவங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

*

18255

நிச்சயமாக, தண்டனை வழங்குவதில் தலைவர் தவறுவதைவிட மன்னிப்பு அளிப்பதில் தவறுவது சாலச் சிறந்தது.

* * *

தீங்கிழைக்கப் பட்டோரின் வணக்கத்தை அஞ்சிக் கொள்ளுங்கள்; ஏனெனில் நிச்சயமாக, அவர்களுக்கும் அல்லாஹுூக்குமிடையே திரை ஏதுமில்லை.

* * *

பசித்தவர்களைப் போஷித்து, நோயுற்றிருப்பவர்களைச் சென்று காணுங்கள். நோயுற்றிருப்பவனைச் சென்று காணும்போது அவனது துன்பத்தில் அவனுக்குத் தேறுதல் கூறுங்கள்.

* * *

மனிதர்களிடம் நன்றி செலுத்தாதவன் இறைவனுக்கு நன்றி செலுத்தியவனாக மாட்டான்.

* * *

நண்பனொருவனின் கடிதத்தை அவனது அனுமதியின்றிப் பார்ப்பவன் நெருப்பைப் பார்க்கிறான். (அதாவது, பாவமான காரியம் செய்கிறான்.)

* * *

எந்த காரியத்தை நீங்கள் செய்தால் உங்களிடையே பரஸ்பர நேசம் ஏற்படும் என்பதை நான் எடுத்தியம்பட்டுமா? உங்களுக்கிடையே ஸலாம் (வாழ்த்து) கூறிக் கொள்ளுங்கள்.

* * *

ஒரு முஸ்லிம் அவனது வீட்டில் நுழையும்போது அவனது மனைவிக்கும் குழந்தைகளுக்கும் ஸலாம் சொல்வான். வீடுகளுக்குள் நுழையும்போது அங்குள்ள மனிதர்களுக்கு ஸலாம் சொல்லுங்கள்; வெளியே புறப்படும்போதும் ஸலாம் சொல்லி மனிதர்களிடம் விடை பெறுங்கள்.

* * *

ஒருவரோடொருவர் கைகுலுக்கிக் கொள்ளுங்கள்; எல்லா தகராறுகளும் உங்களை விட்டு விலகிக் கொள்கின்றன; ஒருவருக்கொருவர் அன்பளிப்புகள் வழங்கிக் கொள்ளுங்கள்: உங்களிடையே நேசத்தை வளர்த்து, விரோத, குரோதத்தை அது போக்கி விடுகிறது.

* * *

சர்ச்சைகளையும் பயனற்ற விவாதங்களையும் விட்டு தவிர்ந்து கொள்ளுங்கள்.

* * *

முஸ்லிம்களிடையே அபிப்பிராயபேதம்—அது நேர்மையானதாகவும் அல்லாஹ்வுக்காகவும் இருந்தால்—ஆசீர்வாதமாகும்; சுயநல காரியங்களுக்காகவும் தீய விருப்பங்களுக்காகவும் இருந்தால் அது சாபக்கேடு ஆகும்.

* * *

பேசும் சக்தியில்லா பிராணிகள் விஷயத்தில் அல்லாஹ்வை அஞ்சுங்கள். சவாரி செய்வதற்கு இலாயக்காக இருந்தால் அவற்

றின் மீது சவாரி செய்யுங்கள்; அவைகளுக்கு ஓய்வு அவசியமாக இருக்கும் பொழுது அவற்றைச் சுதந்திரமாக விட்டுவிடுங்கள்.

* * *

காரணமில்லாமல் குருவியைக் கொல்லும் எந்த மனிதனையும் அல்லாஹ் கேள்வி கணக்குக் கேட்காமல் விடமாட்டான்.

* * *

ஒரு ஆட்டுக் குட்டியின் மீது அம்புகள் எறிந்து கொண்டிருக்கும் மனிதர்களிடையே நபிகள் நாயகம் (ஸல்) நடந்து சென்ற போது, அச்செயலை வெறுத்தவர்களாய்க் கூறினர்கள்: 'வன விலங்குகளை இம்சிக்காதீர்கள்'.

* * *

பிரயாணத்தின் போது இடையில் தங்கி தொழுவதற்கு முன்பாக ஒட்டகங்களை அவிழ்த்து விடுவது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழக்கமாக விருந்தது.

* * *

ஒரு பறவைக் கூட்டிலிருந்து சில முட்டைகளை ஒரு மனிதன் களவாடினன், அவற்றை அக்கூட்டில் மீண்டும் வைத்துவிடுமாறு புனித (நபிஸல்) செய்தார்கள்.

* * *

கொடுங்கோன்மை நடத்தும் அதிகாரியை எதிர்த்து நியாயமான ஒரு வார்த்தை கூறுபவன் உங்களில் மிகச் சிறந்த ஜிஹாது (புனிதப் போர்) செய்பவனுவான்.

* * *

மக்களிடம் மிக நல்ல முறையில் நடந்து கொள்பவனே உங்களில் மிகச் சிறந்தவன்.

* * *

இறைவன் இரக்க சிந்தையுள்ளவன்; இரக்கம் காட்டுதலை அவன் நேசிக்கிறுன்.

* * *

எல்லா நிலமும் அல்லாஹ்வின் நிலமாகும்; சிருஷ்டிப் பொருள்கள் அனைத்தும் அல்லாஹ்வினுடையதாகும். வரண்ட பூமியை வளமாக்குபவன் எவனே அவனே அதன் மீது பாத்தியதை உள்ளவனுகிறுன்.

* * *

இஸ்லாத்தில் ஏகபோக உரிமை தடுக்கப்பெற்றிருக்கிறது.

* * *

உங்கள் நப்ஸுகள் விஷயத்தில் கொடூரமாக நடந்து கொள்ளாதீர்கள்; அல்லாஹ்வும் உங்களிடம் கடுமையாக நடந்துகொள்வான்.

* * *

உங்களது மார்க்கமான இது (இஸ்லாம்) சுலபமானது; மதத்தில் கடுமையை அனுஷ்டிப்பவனை அது அழுத்தி விடுகிறது.

* * *

சுவனலோகம் மாதாக்களின் பாதாரவிந்தங்களில் இருக்கிறது (அதாவது, அன்னைகளை கண்ணியப் படுத்துவதில் சுவனலோகம் இருக்கிறது)

* * *

காணம் நன்னம்பிக்கை யினொரு பாகமாகும்.

* * *

தீயவழியில் செல்லுமாறு பெண்ணுக்குப் போதிப்பவன் நம்மைச் சேர்ந்தவனல்ல.

* * *

எவனுக்கு அவனது நல்ல செயல் திருப்தி அளித்து, கெட்ட அமல் தீயது என்று தோன்றுகிறதோ அவனே மூமின் (நன்னம்பிக்கை கொண்டவன்) ஆவான்.

* * *

ஒரு மூமின் தூஷணை செய்வதுமில்லை; சாபமிடுவதுமில்லை. ஈனச் செயல்களைச் செய்பவனுமல்ல; அவன் வெட்கக் கேடான மனிதனும் அல்ல.

* * *

ஒரு மூமினிடம் இரு தன்மைகளைக் காண முடியாது: அவை, கருமித்தனமும் தீய நடத்தையு மாகும்.

* * *

ஒரு மூமின் தோழமையின் உறைவிட மாவான். சிநேகம் செய்து கொள்ளாதவனும் சினேகம் செய்து கொள்ளப் படாதவனும் நல்ல மனிதனல்ல.

* * *

முதல் பாகம் முற்றுப்பெற்றது.

[ஹதீதுகள்]

நபி நாயகத்தின் திருவாக்கியம்

(மிஷ்காத்தே ஷரீபின் மொழி பெயர்ப்பு)

(முதற் பாகம்)

இதில் நமது நாயகம் முஹம்மது முஸ்தபா றஸுல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் திருவாய் மலர்ந் தருளிய ஹதீதுகள் அடங்கி இருக்கின்றன. முதற்பாகம் 930 ஹதீதுகள் அமைந்தது. டிம்மி 1-8 ஸைஸில் 288 பக்கங்கள் கொண்டது. கிளேஸ் காகிதம் கலிகோ பைண்டு. விலை ரூ. 2—4—0

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

# சிறைப் பறவை சிப்கத்துல்லா

அல்லது

# துப்பு துலக்கிய தூயவர்.

## 2-வது அத்தியாயம்

இரு தினங்களுக்குப் பிறகு, சிப்கத்துல்லாவுக்கு சிறை கவர்னரிடமிருந்து அழைப்பு வந்தது; அங்கு மிக முக்கியமான செய்தி அவருக்காக காத்திருந்தது.

“சிப்கத்துல்லா! உமக்கு நல்ல செய்தி யொன்று வைத்திருக்கிறேன். உம்மை உடனே விடுதலை செய்ய வேண்டு மென்று உயர்தர உத்தியோகஸ்தர்களிடமிருந்து உத்தரவு கிடைத்துள்ளது” என்று கவர்னர் அறிவித்தார்.

மிக வினயமாக, “உங்களுக்கு நன்றி” என்று சிப்கத்துல்லா தெரிவித்தார்.

அவரை ஸ்நான அறைக்கு ஒரு வார்டர் அழைத்துச் சென்றான். சிறை உடைகளைக் களைந்து விட்டு போர்வை போர்த்திய வண்ணம் வெளியே வந்தபோது, சாதாரண உடை அவருக்கு ஆயத்தமாக வைக்கப்பட்டிருந்தது. உடை மாற்றிக் கொண்டு நிலவறைக்குத் திரும்பினார். முகம் பார்க்கும் கண்ணாடியும் முகக்ஷவர பிளேடும் கொண்டு வந்து கொடுத்தான் வார்டர். ஸ்நானத்தை அவர் முடித்துக் கொண்டார்.

அன்று முழுவதும் அவரிஷ்டப்படி அங்குமிங்கும் சென்று வந்தார். உரிமை பெற்றவராதலால் உள்ளிருப்போர் பொறாமை கொள்ளும் வகையில் வினோத உடையுடன் சிறையில் நடமாடினார்.

மண்டபத்திலொரு மூலையில் நின்று கொண்டிருந்தபோது, கதவு படீரெனத் திறக்கப்பட்டு, கூட்டமொன்று திரண்டு வருவதை அவர் கண்டார். அக்கூட்டத்தின் மத்தியில் அழுது அலங்கோல நிலையில் ஒரு வஸ்து காணப்பட்டது. அது மனிதனுமல்ல, மிருகமுமல்ல. முகத்திலே இரத்தம் வழிந்து கொண்டிருந்த அந்த உருவத்தின் உடம்புக் கரங்களிரண்டையும் வார்டர்கள் இறுகப் பிடித்திருந்தனர்.

அவருக்குக் கேட்குமாறு ஒருவன் சொன்னான்: “பஸ்லுர் றஹ்மான். காவலனொருவனை அவன் நையப் புடைத்தான்; ஆனாலும் அவனுக்கு மற்றொரு முறை சிறை தண்டனை கிடைக்காது.”

சிப்கத்துல்லாவுக்கு நினைவு வரவே, அவர் வினவினார்: “பன்னிரண்டு வருட சிறைவாசம் விதிக்கப்பெற்று ஆயுட்கால தண்டனை

அனுபவித்து வரும் பஸ்லுர் ரஹ்மானு அவன்? அவன்கூட நாளை விடுதலையாகி விடுகிருன்"

மண்டபத்தை சுத்தி செய்யும் தோட்டிகளி லொருவன் சொன்னுன்: "ஆம், அவன்தான். ஒன்பது வருட சிறைவாசத்தோடு அவன் தப்பிவிட்டிருப்பான். ஆனுல், கரீம் ஷரீப் காட்டிக் கொடுத்து விட்டான். நாளைக்குப் பிறகு அவனை ஒன்றும் செய்ய முடியாது. இங்கு விஜயம் செய்துள்ள நீதிபதிகளும் இன்னும் ஒரு வாரத்துக்கு இங்கு இருக்கமாட்டார்கள்."

சிப்கத்துல்லாவுக்கு அவ்வழக்கு நினைவுக்கு வந்தது. பஸ்லுர் ரஹ்மானை வார்டரொருவன் அடித்து விட்டான்; அவன்பின்னர் வேலையிலிருந்து நீக்கப்பட்டான். கோபாவேசம் கொண்டு, பஸ்லுல் ரஹ்மானும் அவனைத் திருப்பி அடித்து விட்டான். இது சம்பந்தமான விசாரணையில், கரீம் ஷரீப் சாக்ஷி சொன்னுன். ஷரீபின் சாக்ஷியம், அவனைச் சவுக்கடியினின்று மீட்டிருக்கலாம். ஆனுல் வார்டர்களுடன் சினேகம் பாராட்டி வந்த கரீம், காவலனைக் காட்டிக் கொடுக்கத் துணியவில்லை. எனவே, பஸ்லுர் ரஹ்மான் தண்டனை பெற்ருன்.

கடைசி இரவில் சிப்கத்துல்லாவால் அமைதியாகத் தூங்க முடியவில்லை. அவரது மனம் மரியம்மீது லயித்திருந்தது. ஒரு வினடிகூட அவளை அவர் இழித்துப் பழிக்கவில்லை; அவளது தந்தை மீதும் துவேஷம் கொள்ளவில்லை. கண்ணின் கருவிழி போன்ற மகள் மரியமுக்குச் சிறந்த ஏற்பாட்டை செய்யவேண்டு மென்பதில் கரீமுல்லாகான் கவலை கொண்டிருந்தது நியாயமும் பொருத்தமுமாகும். கானடாவிலிருந்து காப்டன் காதிரி வந்ததும் மரியமுக்கும் அவருக்கும் 'முடிச்சு' போடுவதில் அவர் முனைந்தார்.

செங்குத்தான மலைச்சரிவைக் கடைசி தடவையாகக் கடந்து சென்ருர் சிப்கத்துல்லா. சாவிபோட்டுப் பெரிய பூட்டு திறக்கப் பட்டது. வாயிலுக்கு வெளியே சுதந்திர மனிதராக அவர் நின்ருர்.

அவருக்கு வார்டர் அளித்த ஆசீர்வாதம் வருமாறு: "உமக்கு அதிர்ஷ்டம் உண்டாவதாக. மலைவழி திரும்பவும் வராதீர்."

"மலை ஏறுவதையே நான் விட்டு விட்டேன்" என்று சிப்கத்துல்லா உறுதி அளித்தார்.

கவர்னரிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்ட அவருடன் சிறை வாசத்தை நினைவூட்டக்கூடியது ஒன்றுதான் சென்றது ஸ்டேஷன்வரை அவருடன் வார்டர் வந்தான். ஸ்டேஷனில் சிறிது நேரம் தங்கியிருக்க நேர்ந்தது; அந்த இடைக் காலத்தைப் பயன் படுத்திக் கொண்டு தகவல் சேகரிப்பதில் சிப்கத்துல்லா சிறிது ஈடுபட்டார்.

தலை அசைத்து, வார்டர் சொன்னுன்: "இல்லை, காதர்கானை எனக்குத் தெரியாது; அவனது தந்தை கரீம் ஷரீப் தெரியும்.

பன்னிரண்டு மாதங்களுக்கு முன்பு வரை அவன் இங்கு இருந்தான்; நீர்கூட இங்கு இருந்தீர் அல்லவா?''

சிப்கத்துல்லா ''ஆம்'' என்றார். பரிகாசமாக அவர் வினவினர்:- காதர்கான் மலைமீது ஏறவே யில்லை போலும்.

''இல்லை. எனக்குத் தெரிந்தவரை, எந்த சிறையிலும் அவன் இருந்ததாகத் தெரிய வில்லை. இன்னுமிரு சிறைச்சாலைகளிலும் நான் வேலை பார்த்திருக்கிறேன். அவனைப் பற்றி அநேகர் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டிருக்கிறேன். அவன் தந்திரசாலி எனச் சொல்கிறார்கள். ஆயினும், கெட்டிக்காரன் புளுகு எட்டு நாட்களுக்குத்தானே? பல நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவானல்லவா? வருகிறேன். வந்தனம்'' என்றான் வார்டர்.

இருவரும் கைகுலுக்கிக் கொண்டனர். வண்டியில் வந்தமர்ந்ததும் பட்டுக் கைக்குட்டை கொண்டு கடைசி 'சிறை கறை'யை விட்டு கைகளைத் துடைத்துக் கொண்டார்.

சென்னை எழும்பூர் ரயில்வே ஸடேஷனில் அவனது வேலைக்காரன் அவனுக்காகக் காத்திருந்தான்; வெகு தூரத்திலிருந்த போதே அவரை அடையாளம் கண்டு கொண்டு, அவரது நாய் குரைத்து வரவேற்பு அளித்தது. இன்னொரு விநாடியில் அவரது அரவணைப்பில் அது இருந்து, அவரது முகத்தையும் காதுகளையும் தலை மயிரையும் ஆசையோடு நக்கியது. பிளாட்பாரம் மேடைமீது நாயைவிட்டபோது சிப்கத்துல்லாவின் கண்களிலிருந்து கண்ணீர் கசிந்தது. அது ஆனந்தக் கண்ணீரா அல்லவா என்பது அவருக்குத்தான் தெரியும்.

''உங்களுக்கு அநேக கடிதங்கள் வந்திருக்கின்றன. வீட்டில் விருந்துண்கிறீர்களா அல்லது வெளியே செல்லப்போகிறீர்களா?'' பணியாள் பஹதூர்ஷா பணிவுடன் கேட்டான். உத்கமண்டலத்துக்கு உல்லாச யாத்திரை சென்று திரும்பினால் வரவேற்பதைப்போல எஜமானரை அவன் வரவேற்று வார்த்தை யாடினான்.

''ஆம், வீட்டில் விருந்துண்பேன்'' என்று சொல்லி, பணியாள் ஏற்பாடு செய்திருந்த டாக்ஸியில் ஏறிக்கொண்டார்; அவருக்குப் பக்கத்தில் அவரது நாய் தாவி உட்கார்ந்து கொண்டது.

''சாமான்கள் எதுவும் இல்லையா?'' என்று கதவு வழியாகக் கேட்டான் பணியாள்.

சிப்கத்துல்லா சொன்னார்: ''சாமான் எதுவும் கிடையாது. பஹதூர், என்னுடன் காரில் வந்துவிடு.''

அவன் தயங்கினான். பின்னர், ''அது எனக்குப் பெருமை தரும் உரிமை'' என்றான்.

சென்ற ஒரு வருடமும் ஒன்பது மாதங்களுமாக நான் அனுபவித்த உரிமையைவிட பெரிதல்ல என்று சிப்கத்துல்லா குறிப்பிட்டார்.

அரண்மனைக்காரத் தெருவை அணுகியதும், பணியாள் பஹதூர் வினவினான்: "நீங்கள் நல்லவிதமாக பொழுதைக் கழித்திருப்பீர்கள் என நான் நம்புகிறேன்."

சிப்கத்துல்லா சிரித்தார், "மகிழ்ச்சியாகப் பொழுது போகவில்லை. சிறைச்சாலையில் சிரிப்புக்கு இடமேது?"

எஜமானனின் வார்த்தைகளை ஒப்புக் கொண்டான் பஹதூர். "நான் ஒருபோதும் சிறையில் இருந்ததில்லை" என்று அவன் சொன்னான்.

சிப்கத்துல்லாவின் இல்லம் மூர்தெருவில் இருந்தது; அதன் அழகிய அமைப்பை தூரவிருந்து கண்டபோது, அவருக்கு அழவிலா ஆனந்தம் ஏற்பட்டது.

"நீ ஒரு முட்டாள்" என்று தனக்குத்தானே உரத்த குரலில் கூறினார். "ஆமாம்" என்று பக்கதாளம் கொட்டினான் பஹதூர்.

மூர்தெருவிலுள்ள இல்லத்தில் சிப்கத்துல்லாவுடன் அன்றிரவு அநேகர் அந்தரங்கமாக அளவளாவினர். ஆரம்பத்தில், பஹதூர் ஷாவை அழைத்து, சிப்கத்துல்லா சொன்னார்:

"பஹதூர்! நான் இங்கு இல்லாதிருந்த காலத்தில் 'பொடி'ப் பயல்கள்கூட சினிமாவுக்குச் செல்லும் பழக்கத்துக்கு பலியாகி விட்டிருக்கின்றனர் என்று நான் கேள்விப்படுகிறேன்."

"ஆமாமுங்க, நான் கூட சினிமாக் காட்சிகளைக் காண்பதில் கழிபேருகை அடைகிறேன்."

"அப்படியானால், நீயும் போய் இரவு பதினொரு மணிவரை நீடிக்கக்கூடிய நீளமான படத்துக்குச் செல்."

"நீங்கள் கூறுவது........"

"நீ இன்றிரவு இங்கு இருக்கலாகாது என்பதுதான் எனது எண்ணம்."

பஹதூரின் முகம் வாடியது; ஆனாலும் பண்புமிக்க பணியாள் என்ற முறையில் எஜமானனின் எண்ணத்தையறிந்து, சொன்னான்: "நல்லதுங்க." எஜமானன் எண்ணித்துணிய விருக்கும் கொடிய கருமம் யாதாக இருக்கும் என்ற வியப்புடன் 'விர்'ரென வீட்டை விட்டு வெளியேறினான்.

10-30 மணிக்குக் கடைசி மனிதரும் விடை பெற்றுக் கொண்டார். சிகரெட் துண்டை தூர யெறிந்து, சிப்கத்துல்லா சொன்னார்: "நாளை காலை கரீமுல்லாகானை காணப்போகிறேன். மரியமின் மணம் பற்றி உனக்கு ஒன்றும் தெரியாதா? அது எப்போது நடைபெறப் போகிறது?"

(தொடரும்.)

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

187055

# ஸுல்தான் சிக்கந்தர் (அலை)

## கிஸ்ஸா

ஸுல்தான் சிக்கந்தர் ஸுல்கர்னைன் (அலை) அவர்கள் ஒரு நபியாக இருந்து உலகத்துக்கும், உலக மக்களுக்கும் பல நல்ல காரியங்கள் செய்திருக்கிறார்கள். ஸுல்தான் சிக்கந்தர் ஸுல்கர்னைன் உடைய அரசாட்சி உலகத்தில் சிறந்த அரசாக்ஷியாக இருந்தது. "ஜுல்கர்னைன்" என்றால் இரண்டு கொம்புகளை யுடையவர் என்று அர்த்தம். இதன் விபரமெல்லாம் இந்த நூலில் விரிவாய் சொல்லப்பட்டிருக்கிறது.

இத்துடன் நம்ரூது மன்னருடைய கிஸ்ஸாவும், நபி லூத் அலைஹிஸ்ஸலாமுடைய கிஸ்ஸாவும் சேர்த்து எழுதப்பட்டிருக்கிறது. எல்லோரும் படித்து அறிய வேண்டிய பிரயோஜனமான புஸ்தகம் இது.

சுத்தத் தமிழ் விலை அணா 8

# அறபு தஃலீமுல் புர்கான் பீ

## எஸ்ஸர்னல் குர்ஆன்

இது சிறு குழந்தைகள் அரபி ஓத சுலபமாய் கற்றுக் கொள்ள, புதிய முறையில் எழுதியுள்ள அரபி காயிதா. இதில் ஒவ்வொரு பாடத்திற்கு முன்பும் அந்த பாடத்தைக் குழந்தைகளுக்கு எவ்வாறு கற்றுக் கொடுக்க வேண்டுமென்ற ஒஸ்தாத்மார்களுக்கு குறிப்பும் அறபுத் தமிழில் போடப்பட்டுள்ளது. இதை அழகாக பெரிய எழுத்தில் எழுதி போட்டோ பிளாக் செய்து கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. இரண்டு பாகங்களும் சேர்ந்தது.

விலை அணா. 6

எஸ்ஸர்னல் குர்ஆன் லாகூர் ஸ்டைல் பெரியது அணா. 10

ஷெ சிறியது விலை அணா. 6

---

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# பத்ஹுர் ரஹ்மான்
# பில்பிக்ஹின் னுஃமான்

## (ஹனபி மதுஹபுக்குரியது)

பிரயோஜனமான கல்வி, பிரயோஜன மில்லாத கல்வி என்று இரண்டு வகை யுண்டு. உலக வாழ்வை மட்டும் நமக்கு எடுத்துச் சொல்வது பிரயோஜன மில்லாத கல்வி. நம் மனமும் ஒழுக்கமும் சீர்பெற்று மறுமையில் நமக்கு ஈடேற்றம் தரக்கூடியதே பிரயோஜனமான கல்வியாகும்.

தீனுல் இஸ்லாத்தின் தத்துவங்களையும், அனுஷ்டான ஒழுக்க முறைகள் என்னும் பிக்ஹு மஸ்அலாக்களையும் கற்றறிந்து அமல் செய்ய வேண்டியது ஒவ்வொரு முஸ்லிமுடையவும் கடமையாகும். இது தான் இம்மை, மறுமை இரு லோகத்திலும் பிரயோஜனம் தரவல்லது.

இந்த நூலில் ஒவ்வொரு முஸ்லிமும் அறிந்து ஒழுக வேண்டிய எல்லா விஷயங்களும் அடங்கி யிருக்கின்றன. உதாரணமாக ஈமான், இஸ்லாம், கலிமா, பரிசுத்தம், தொழுகை, ஜுமுஆ மகிமை, ஜியாரத்துல் குபூர், ஜக்காத்து நோன்பு, ஹஜ்ஜு முதலிய மஸ்அலாக்களும், இஸ்லாமிய ஒழுக்கம், ஸுன்னத்தின் சிறப்பு, ஸபருடைய ஒழுக்கம், இபாதத்தின் மகிமை மற்றும் சகலவிதமான போதனைகளும் அடங்கி யிருக்கின்றன.

நல்ல சுத்த தமிழில் இனிய நடையில் எழுதப்பட்ட புதிய நூல்—புதிய பதிப்பு. ஆங்கு அரபு மொழியில் ஓத வேண்டிய கலிமா, துஆ முதலானவைகள் அறபிலேயும் அமைக்கப்பட்டுள்ளன. இதன் அருமை நேரில் பார்த்தால் தான் தெரியும்.
இதன் விலை ரூ. 3

ஷை அறபுத் தமிழ் அல்பத்ஹுர் றப்பானி-பி-பிக்ஹே நிஃமானி
இதன் விலை ரூ. 5

---

கிடைக்குமிடம்:—

**ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்**

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

**நெ 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ், 5.**